# தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 265 சனிக்கிழமை 04 டிசம்பர் Saturday 04th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## 6 சடலங்களும் யாருடையது?

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வடக்கின் கடற்கரையோரங்களில் கரையொதுங்கியுள்ள 6 சடலங்களுக்குரிய ஆண்கள் யார் என்பதனை இன்றுபோல் வரை பிரபலமான இலங்கை பொலிஸாரால் இதுவரையில் ஏன் இன்னும் கண்டுபிடிக்க முடிய பக்கம் 02

## வெளிநாடு பறந்தார் ஜனாதிபதி கோதா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான அபுதாபியில் இடம்பெறவுள்ள 5 ஆவது இந்திய சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி இந்த விஜயத்தினை மேற்கொண்டுள்ளார். இன்று மற்றும் நாளை இந்த மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒமிக்ரான் திரிபு வைரஸ் இலங்கைக்குள் புகுந்தது

### -நைஜீரியாவிலிருந்து வந்த இலங்கையருக்கு தொற்று-



க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய வைரஸ் திரிபான ஒமிக்ரான் உலக நாடுகள் பலவற்றை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள நிலையில் நேற்று இலங்கையில் ஒமிக்ரான் வைரஸ் தொற்றுடன் முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் நிபுணர் வைத்தியர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவிலிருந்து வருகைதந்த இலங்கையர் ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் நவம்பர் 23 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. உலகளவில் இலங்கை உட் பக்கம் 02

# நேற்றையதினம் நாடு முழுவதும் மின் தடை

### -பல்வேறு சேவைகள் பாதிப்பு -மக்கள் பெரும் அசௌகரியம்-

க.பிரசன்னா

நாடு முழுவதும் நேற்று காலை 11.45 மணியளவில் ஏற்பட்ட மின்தடை காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன் மின் ஆதாரத்துடன் தொடர்புடைய சேவைகளும் பாதிப்பினை எதிர்கொண்டிருந்தன.

மின் தடை தொடர்பில் எவ்வித காரணங்களும் வெளியிடப்படவில்லை. எனினும் மீண்டும் நிலைமை வழமைக்கு திரும்புவதற்கு பல மணித்தியாலங்கள் செல்லுமென இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார். பின்னர் கொழும்பிலுள்ள சில பக்கம் 02

## புத்தர் சிலைகள் உடையும் பௌத்த விகாரைகளில் குண்டுகள் வெடிக்கலாம்

### -தேர்தலில் வெற்றி பெற அரசிடம் உள்ள ஒரே வழி இதுதான் -எம்.பி.ஹர்ஷன ராஜகருண



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்த நாட்டில் இன்னொரு தேர்தல் வரும்போது இன்னும் புத்தர் சிலைகள் உடையும், பௌத்த விகாரைகளில் கூட குண்டுகள் வெடிக்கலாம். ஏனெனில் தேர்தலை வெற்றி பெற அரசிடம் உள்ள ஒரே வழி இது தான் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்ட பக்கம் 02

## எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு உத்தரவு

### -நிறுவனங்களுக்கு அவசர அறிவிப்பு-



க.பிரசன்னா

தற்போது சந்தையில் கிடைக்கும் எரிவாயு சிலிண்டர்களில் எதில் மெர்கேப்டேன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எதில் மெர்கேப்டேன் என்ற வேதிப்பொருள் பக்கம் 02

## தமிழ் கட்சிகள் வெளிநடப்பு

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாதுகாப்பு அமைச்சு,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடுகள் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பு கோரியும் அதனை சபாநாயகர் மற்றும் ஆளும் கட்சியினர் நிராகரித்ததனால் ஆளும் தரப்புக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து தாம் வெளிநடப்பு செய்வதாகக்கூறி இரு கட்சிகளும் சபையிலிருந்து வெளியேறின.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை, பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கள் மீதான விவாதம் இடம்பெற்ற வேளையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபையில் அரசாங்கத்தை பக்கம் 02

# இலங்கையில் 20 பேரை பலியெடுத்தது கொரோனா

### -நேற்றையதினம் 508 பேருக்கு தொற்று-

இலங்கையில் கொரோனாவுக்கு மேலும் 20 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணங்கள நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,419ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் மேலும் 508 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 565,979 ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02

## ஸஹ்ரானினால் மேலும் சில குண்டு வெடிப்புக்கள்

### -வெளியான ஆதாரங்கள்-

2018 பெப்ரவரி 6, 12, 2018 ஆகஸ்ட் மாதம் 26, மற்றும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகிய திகதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்கள் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

2018-02-06 ஆம் திகதி பள்ளிவீதி புதிய காத்தான்குடி என்ற விலாசத்தை சேர்ந்த அப்துல் மொஹமட் பர்ஹான் என்ற நபரின் வீட்டின் மீதும் மற்றும் 2018-02-12 ஆம் திகதி சி.பி காசிம் வீதி, காத்தான்குடி 01 பகுதியில் அமைந்திருந்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சிக் காரியாலயம் பக்கம் 02

## நாசகார வேலையாக இருக்கலாம்

### -மின்சார சபை பொது முகாமையாளர்-

க.பிரசன்னா

நாட்டில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மின் தடையானது நாசகார வேலையாக இருக்கலாமெனவும் மின்சார பொறியியலாளர்கள் வேண்டுமென்றே திருத்த வேலைகளில் காலதாமதத்தை ஏற்படுத்துவதாகவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வேண்டுமெனறே மின்சாரத்தடையினை ஏற்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவும் அறிவித்திருந்தார். மேலும் வெலிவிட்ட பிரதேசத்தில் நேற்றிரவு ஏற்பட்ட மின்சாரத்தடையினால் ஏற்பட்டுள்ள மக்கள் சிரமம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் வர்த்தக மற்றும் செயற்பாட்டு உபாயப் பிரிவின் சிரேஸ்ட பொறியியலாளரினால் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் பக்கம் 02

### -நுரைச்சோலை அனல் மின்-

## நிலையம் வழமைக்கு வரும்வரை மின்சார விநியோக தடை நீடிக்கும்



நாடு பூராகவும் ஏற்பட்ட மின் தடையை தொடர்ந்து நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை முழுவதுமாக வழமைக்கு கொண்டு வர 3 நாட்கள் வரை செல்லலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மின்சாரத் தேவையின் அடிப்படையில் குறுகிய கால மின் விநியோக தடை ஏற்படக்கூடும் என மின்சார அமைச்சு தெரிவித்துள்ளது.

900 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 3 பக்கம் 02

# மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது

### -ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும்-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

உங்களை ஆட்சி பீடம் ஏற்றி அலங்கரித்து அழகுபார்த்த பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை மக்கள் இன்று உங்களைச் சரியாக இனங்கண்டுள்ளார்கள்.

இன்று நாட்டில் எழுந்துள்ள வெகுசனக் கிளர்ச்சி இதனை நன்கு வெளிக்காட்டி நிற்கின்றது.மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது. அது ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பக்கம் 02

### -புத்தகங்களை தூக்கி சபை நடுவே வீசி விட்டு-

# சபையை விட்டு வெளியேறிய எதிரணி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தில் இறுதியுரையாற்றிய எதிர்க்கட்சி எம்.பி.க்கு நேரம் மட்டுப்படுத்தப்பட்டதால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சியினர் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் புத்தகங்களை தூக்கி சபை நடுவே வீசி விட்டு சபையை விட்டு வெளியேறிச் சென்றனர்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலையில் எதிர்க்கட்சி தரப்பில் இறுதி உறுப்பினர் மனுஷ நாயணக்கார எம்.பிக்கு 13நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் தனது உரையை ஆம்பித்து உரையாற்றுகையில் அரசாங்கத்தினால் தீர்வு காணமுடியாமல் போயிருக்கும் பல விடயங்களை பட்டியலிட்டுக்கொண்டு சென்றதுடன் ஊழல் மோசடிகள் தொடர்பாகவும் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவரது பக்கம் 02

## பொருளாதார நெருக்கடியை தணிக்க பசில் டில்லியில் தீவிரமாக பேச்சு

### -இந்தியாவின் உதவியை பெற்றுக்கொள்ள நான்கு முனை அணுகுமுறை-

நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் இரண்டு நாள் இந்திய விஜயத்தின் போது, இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கு உதவுவதற்காக உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக நான்கு முனை அணுகுமுறையை உள்ளீர்த்துக்கொள்வதற்கான முன்முயற்சிகள் குறித்து கலந்துரையாட புதுடில்லியும் கொழும்பும் இணங்கியுள்ளன.

கடன், நாணய பரிமாற்றம்,திருகோணம லைனரிபொருள் குதம் நவீனமயமாக்கல் மற்றும் இந்திய முதலீட்டிற்கான வசதி பக்கம் 02

## நாசகார வேலையாக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைக்கு அமைவாக மின்சார பொறியியலாளர்களின் உதவியுடன் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

நவம்பர் 2 ஆம் திகதி நண்பகல் 12 மணிமுதல் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கமானது 'சட்டப்படி வேலை' தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுத்து வந்த நிலையில் டிசம்பர் முதலாம் திகதி முதல் இரண்டாம் கட்ட தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனால் பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னர் எவ்விதமான மேலதிக மின்சார மறுசீரமைப்பு பணிகளையும் முன்னெடுக்கமாட்டார்கள் எனவும் சட்டப்படி 8 மணித்தியால வேலை மாத்திரம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று ஏற்பட்ட திடீர் மின்தடையின் போது தொழிற்சங்க நடவடிக்கையினால் மின்சார சீரமைப்பு பணிகளை முன்னெடுப்பது தாமதமாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் திங்கட்கிழமை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளமையினால் பணிப்புறக்கணிப்பை உடனடியாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு நேற்று தெரிவித்திருந்தார். இதேவேளை கடந்த 28 ஆம் திகதி நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்ட மின் தடையினால் பலர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் திடீர் மின்சாரத் தடை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பிரதினாண்டோ தெரிவித்திருந்தார்.

இரவு 7.35 மணியளவில் கொத்மலை மின்னுற்பத்தி நிலையம் முதல் பியகம வரையான மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டிருந்தது. எனினும் இரவு 9 மணியளவில் மின் விநியோகம் வழமைக்கு திரும்பியதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

மகாவலி நீர்மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் தடை ஏற்பட்டமையின் விளைவாக சபுகஸ்கந்த, அதுருகிரிய, இரத்மலானை, கிரிபத்கும்புர, கொஸ்கம, பன்னிப்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, குருநாகல், ஹபரணை, மாத்தறை மற்றும் காலி உள்ளிட்ட பகுதிகளில் மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனால் குறித்த மின்தடைக்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கான இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பிரதினாண்டோ தெரிவித்திருந்தார்.

## தமிழ் கட்சிகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக விமர்சித்து உரையாற்றியிருந்தனர்.

இனப்படுகொலை விவகாரங்கள், வடக்கு-கிழக்கின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விடயங்களை சபையில் முன்வைத்த வேளையில் அதற்கு ஆளுந்தரப்பு அமைச்சர்கள் மற்றும் பின்வரிசை உறுப்பினர்களினால் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் விமர்சனத்தையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் பிற்பகல் வேளையில் அமைச்சின் சகல விவாதங்களும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருந்த வேளையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீது வாக்கெடுப்பு நடத்த கோரிக்கை விடுத்தார்.

எனினும் இதற்கு ஆளும்கட்சியும், சபாநாயகரும் இணக்கம் தெரிவிக்கவில்லை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சின் மீதான வாக்கெடுப்பை கேட்க 24 மணிநேரத்திற்கு முன்னர் அதனை சபைக்கு அறிவிக்க வேண்டும். ஆனால் நீங்கள் அறிவிக்கவில்லை, எனவே, இதனை கருத்தில் கொள்ள முடியாது. ஆனால் உங்களின் எதிர்ப்பை பதிவுசெய்துகொள்கின்றோம் என சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும் இதற்கு இணக்கம் தெரிவிக்காத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., தான் இது குறித்து ஏற்கனவே எதிர்க்கட்சி பிரதம கொறடாவிற்கு அறிவித்துள்ளதாகவும், ஆனால் அவர்கள் அறிவிக்காதது எனது தவறு அல்ல என்பதை சுட்டிக்காட்டியதுடன், தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பறிக்கும் செயலாக இது அமைந்துள்ளது என்றார். இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கட்சி தலைவர்கள் கூட்டத்தின் எவ்வாறான இணக்கத்திற்கு வந்தாலும் கூட, பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் தனது சிறப்புரிமையை பயன்படுத்தி வாக்கெடுப்பை கேட்கும் வேளையில் அதனை எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது. வாக்கெடுப்பு கேட்கும் வேளையில் அதற்கு அனுமதிக்க வேண்டும். அதனை நிராகரிப்பது தவறானது என்றார்.

## சபையை விட்டு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரைக்கு தடங்கள் ஏற்படுத்தும் வகையில் ஆசனங்களில் இருந்து நின்றவண்ணம் எதிர்ப்பு கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர்.அத்துடன் பல தடவைகள் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பியபோது சபாநாயகரும் அவர்களுக்கு அதற்காக அவகாசம் வழங்கிவந்தார்.

அதன் காரணமாக மனுஷ நாயணக்காரவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவரால் அவரது பேச்சை முடித்துக்கொள்ள முடியாமல்போனது. அதற்கிடையில் சபை நடவடிக்கை முடியும்வரை நேரத்தை பெற்றுக்கொள்ளவும் சபாநாயகர் சபையில் அனுமதியை பெற்றுக்கொண்டிருந்தார். அவ்வாறான நிலையில் மனுஷ நாணயக்காரவுக்கான நேரம் முடிந்ததாக தெரிவித்து சபாநாயகர் ஒலிவாங்கியை முடக்கினார். அதனைத்தொடர்ந்து விவாதத்தில் பதிலளித்து உரையாற்ற அமைச்சர் சரத் வீரசேகரவின் பெயரை அழைத்தார்.

இதன்போது எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து, அவரது பேச்சை முடிப்பதற்கு சில நிமிடங்களை வழங்குமாறு சபாநாயகரை கேட்டுக்கொண்டார். அதற்கு சபாநாயகர் இணங்க மறுத்துவிட்டார். இதன்போது நளின் பண்டார எழுந்து, சபை நடவடிக்கை முடியும்வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதால் உரையை முடிப்பதற்கு நேரம் வழங்கவேண்டும் என வலியுறுத்தினார். அதன்போதும் சபாநாயகர் இணங்காமல் அமைச்சர் சரத் வீரசேகரவை உரையாற்றுமாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஆத்திரமடைந்த சபையில் இருந்த ஹர்ஷ டி சில்வா சபாநாயகருக்கு அருகில் சென்று தங்கள் பக்க நியாயத்தை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கையில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சபை நடுவுக்கு வந்து கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இருந்தபோதும் பிரதான எதிர்க்கட்சியைச்சேர்ந்த சுமார் 10 உறுப்பினர்கள் வரையே இதன்போது சபையில் இருந்துகூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். நிலைமை கைகலப்புவரை செல்லாமல் தடுப்பதற்கு படைக்கல சேவிதர்களும் இதன்போது சபைக்கு நடுவே வந்து உறுப்பினர்களை சமாதானப்படுத்தினர். அத்துடன் சபை நடுவுக்கு வந்து சத்தம்போட்டுக்கொண்டிருந்த ஆளும் தரப்பு உறுப்பினர்களை ஒருசிலர் சமாதானப்படுத்திக்கொண்டு ஆசனங்களுக்கு அனுப்பிவைத்தனர். அதனைத் தாடெர்ந்து நளின் பண்டாரவுக்கு ஒழுங்கு பிரச்சினைக்கு இடமளித்தபோதும் அவரால் விடயத்தை தெரிவிப்பதற்கு முன்னர் ஒலிவாங்கி முடக்கப்பட்டு, அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு உரையாற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனால் ஆத்திரமடைந்த பிரதான எதிர்க்கட்சியினர் கோபத்துடன் தங்களது மேசைகளில் இருந்த புத்தங்களை தூக்கி எறிந்துவிட்டு, சபையைவிட்டு வெளிநடப்பு செய்தனர்.

இதன்போது சபையில் இருந்து தமிழ் கட்சி உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்தவாறு சபை நடவடிக்கையை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

## எரிவாயு விநியோகத்தை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் குறைந்த அளவே இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 2021 ஜனவரி 1 முதல் 2021 டிசம்பர் 1 வரை இதுபோன்ற 131 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக திரவ பெற்றோலிய எரிவாயு வெடிப்புகளை விசாரிப்பதற்கான இலங்கைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இக்குழுவினால் பிரச்சினைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தொடர்ந்தும் வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் கொள்வனவு செய்கின்ற எரிவாயு சிலிண்டர் வாங்கும் இடத்தில் கசிவு உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமையல் எரிவாயு சிலிண்டரில் சந்தேகத்துக்குரிய கசிவு இருந்தால் எரிவாயு சிலிண்டரை காற்றோட்டமிக்க வெளிப்பகுதியில் வைக்க வேண்டும். அதன்பிறகு, 011 5 811 927 அல்லது 011 5 811 929 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விற்பனை முகவர், பொலிஸ் மற்றும் விசாரணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஓமிக்ரான் திரிவு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட 28 நாடுகளில் ஒமிக்ரான் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனினும் ஒமிக்ரான் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நபர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியினையும் பெற்றிருக்கவில்லையென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பேராசிரியர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனம் ஒமிக்ரோன் வகையை வைரஸின் புதிய திரிபாக கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பிரகடனப்படுத்தியுள்ளது. கடந்த ஒரு மாதத்திற்குள் தொடர்புடைய நாடுகளில் இருந்து வந்த நபர்கள் தொடர்பான தரவுகள் கண்காணிக்கப்படுவதுடன் அதே நாளில் தென்னாபிரிக்கா, போட்ஸ்வானா, லெசோதோ, நமீபியா, சிம்பாப்வே மற்றும் எஸ்வடினி உள்ளிட்ட ஆறு தென்னாப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வருகைதருவதற்கு தடை விதிக்கப்பட்டதாக சிரேஸ்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய உடல்நிலை தொடர்பில் மதிப்பீடு செய்யப்படுவதாகவும் அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் துரித அன்டிஜெனட் சோதடினைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இக்குழுவிலுள்ள எவரும் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்படவில்லை. தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் மாதிரிகள் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஒரு பரிசோதனையின் மூலமே அவர் ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட நபர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் சமூகத்தை பாதிக்காது. சம்பந்தப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய தொடர்புகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

மேலும், ஒரே ஒரு தடுப்பூசியை மட்டுமே பெற்ற நபர்கள், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறும், இரண்டு டோஸ்களைப் பெற்றவர்கள், குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டுள்ளவர்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறும் சிரேஸ்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

## 6 சடலங்களும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை? சடலங்கள் கரையொதுங்குவதற்கு காரணம் என்ன? இவ்வாறு சடலங்கள் கரையொதுங்குவதற்கு பொறுப்புக்கூறுவது யார்? என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான எஸ்.சிறிதரன் கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 27 ஆம் திகதி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் இரு உடல்கள் கரையொதுங்கியுள்ளன. 28 ஆம் திகதி நெடுந்தீவில் ஒரு உடலும் 30 ஆம் திகதி கட்டைக்காட்டுப்பகுதியில் ஒரு உடலும் 2 ஆம் திகதி பருத்தித்துறை சக்கோட்டையில் ஒரு உடலும் வெற்றிலைக்கேணியில் ஒரு உடலுமாக மொத்தம் 6 உடல்கள் கரையொதுங்கியுள்ளன. இதில் ஒன்று மட்டுமே உள்ளாடையுடன் காணப்பட்டுள்ளது. இவர்கள் யார் என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏன் இவ்வளவு காலம் எடுக்கின்றது?இலங்கைப் பொலிஸார் கெட்டிக்காரர்கள், பத்திரிகையாளர்களை சுடுவார்கள், மக்களை சுடுவார்கள்,ஆனால் அவர்களுக்கு ஏன் இதனை மட்டும் கண்டுபிடிக்க முடியாதுள்ளது?

இங்கு கரையொதுங்கிய உடல்களில் ஒருவரின் கையில் சமய நூல் கட்டப்பட்டுள்ளது. இன்னொருவர் உடலில் 3 நாட்களுக்கு முதல் வெட்டுக்காயங்களுக்காக இடப்பட்ட தையல் அவிழ்க்கப்படாத நிலையில் உள்ளது. இன்ரபோல் முதல் உலகம் வரை பிரபலமாகி பேசப்படுகின்ற இலங்கை பொலிஸாரால் ஏன் இன்னும் இந்த உடல்களுக்குரியவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவி ல்லை?இந்த நாட்டில் சடலங்கள் அதுவும் ஆண்களினுடைய சடலங்கள் கரையொதுங்குகின்றது என்றால் இதற்கு யார் பொறுப்புக்கூறுவது? இதற்கு என்ன காரணம்? என்றார்.

## பொருளாதார நெருக்கடியை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகிய நான்கு முனை களிலான முயற்சிகள் மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக்குறைப்பதற்கு இந்தியா உதவுவதற்கான வழிமுறைகள் தொடர்பாகஇறுதி த் தீர்மானங்களுக்கான மேலதிக கலந்துரையாடல்கள் நிதியமைச்சர்பசில் ராஜபக்சவின் விஜயத் தின்போது இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவினால் வழங்கப்பட்ட கடன் அடிப்படையில்உணவு, மருந்துகள், எரிபொருள் கொள்வனவுகள் இலங்கையின் சென்மதிநிலுவை ப் பிரச்சினைகளை கையாள்வதற்கான நாணய பரிமாற்ற ஒப்பந்தம், இந்தியா பல காலமாக முன்னெடுத்துவரும் திருகோண மலை எண்ணெய்க் குதங்களை 'விரைவாக' நவீனமயமாக்கல் திட்டம் ஆகிய நான்கு முனை முன்முயற்சிகள் இந்த தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பயணத்தின்போது வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோருடனான அமைச்சர் பசில் ராஜபக்சவின், சந்திப்பின் முடிவில் வெளியிடப்பட்ட இலங்கை உயர் ஸ்தானிகராலய அறிக்கையில், இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளப்பட்ட காலக்கெடுவிற்குள் முன்கூட்டியே பூர்த்தி செய்யப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## மக்கள் கிளர்ச்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம் .பி.யான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கம் 3 விம்பங்களைக் கொண்ட பெரும் தூண்களின் மேல் தான் கட்டியெழுப்பப்பட்டது. அது மஹிந்த ராஜபக்ச எனும் பிம்பம், கோத்தபாய ராஜபக்ச என்னும் பிம்பம், பௌத்த சிங்கள பேரினவாதம் எனும் பிம்பம்.ஆனால் கடந்த இரு வருட காலத்தில் மஹிந்த, கோத்தபாய எனும் இரு பிம்பங்கள் கொண்ட தூண்களும் ஆட்டம் காணத் தொடங்க நான்காவது தூணின் அவசியம் உணரப்பட்டு அது எண்ணெய் விலைஉயர்வு என்ற நாடகம் மூலம் பசில் ராஜபக்சவினை பாராளுமன்ற உறுப்பினராக்கி நிதி அமைச்சர் என உயர்த்தி அரசைத் தாங்கும் நான்காவது தூணாக இருத்த முனைந்தது. அலாவுதீனின் அற்புத விளக்கோடு பொருளாதார அற்புதங்களையும் நிகழ்த்துவார் என்ற பெரும் எதிர்பார்க்களுடன் பாராளுமன்றம் வந்து நிதியமைச்சராகி இன்று இந்த வரவு-செலவுத்திட்டத்தினை வெற்றுப் பானையாக வெறும் எழுத்துக்களுடனும் இலக்கங்களுடனும் சமர்ப்பித்துள்ளார்.

## சஹ்ரானினால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதும் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸாரினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றில் சமர்ப்பணங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மட்டக்களப்பு குற்றவியல் விசாரணை அதிகாரிகளினால் சம்பவ இடங்களில் இருந்து வெடிகுண்டுப் பாகங்கள் உள்ளிட்ட வழக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டு அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி, 2018.12.04 திகதியன்று அரச இரசாயன பகுப்பாய்வாளரால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் குறித்த வழக்குப் பொருட்கள் நேர வெடிகுண்டுகளின் பாகங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட குண்டுவெடிப்பு சம்பவங்களின் வழக்குப் பொருட்களுடன் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவங்களின் வழக்குப் பொருட்கள் தொடர்பு பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இது தெரியவந்துள்ளது.

## நிலையம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலைகள் முழுமையாக இயங்கும் வரை அடுத்த சில நாட்களில் நாட்டின் சில பகுதிகளில் இவ்வாறான குறுகிய கால மின்வெட்டுகள் ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பிரதான மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இன்று முற்பகல் 11.30 மணியளவில் நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 541,536 ஆக அதிகரித்துள்ளது.

## புத்தர் சிலைகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகள் வெளிவர வேண்டுமானால் அது தொடர்பான விசாரணைகளை சர்வதேச விசாரணை அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் மூலமே உண்மையான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்ற நம்பிக்கையை கிறிஸ்தவ மக்களிடமும் பேராயர் மல்கம் ரஞ்சித்திடமும் ஏற்படுத்த முடியும். ஒரு பௌத்தனாக நான் கூட உண்மையான விசாரைணகளையே எதிர்பார்க்கின்றேன்.

இந்த தாக்குதல் தொடர்பில் சூழ்ச்சி ஒன்று இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் கூட கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் அவரிடம் கூட இதுவரையில் வாக்குமூலம் பெறப்படவில்லை. எனவே சர்வதேச விசாரணை அமைப்புக்களான ஸ்கொட்லான்ட் போன்றவற்றிடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கான பொறுப்பை ஒப்படைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்.

## நேற்றைதினம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் சில மணிநேரங்களில் நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பியிருந்தது.

இதேவேளை மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறே மின் தடைக்கு காரணமென மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் நாட்டில் தொடர்ச்சியாக திடீர் மின்தடை ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நீர் விநியோகம், புகையிரத சேவை என்பவற்றுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. திடீர் மின்தடை காரணமாக கொழும்பு உட்பட அதனை அண்டிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைபட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்திருந்தது. அம்பத்தளை மற்றும் பியகம நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து இடம்பெறும் நீர் விநியோகமே இவ்வாறு பாதிப்பினை எதிர்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் கந்தானை, கேத்ஹேன, லபுகம, கலடுவாவ மற்றும் பம்புகுளிய பகுதிகளிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் நீர் விநியோகம் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது. மின் தடையினால் நீர் விநியோகக் குழாயின் அழுத்தச் செயற்பாடுகளில் தடை ஏற்பட்டிருந்தமையின் காரணமாக நீர் விநியோகம் தடைபட்டிருந்தது.

# வடக்கில் போதைவஸ்து வியாபாரிகளை கண்டறிய தனி புலனாய்வுப் பிரிவு தேவை

## -வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன்-



பா. கிருபாகரன் -
ந.ஜெயகாந்தன்

வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து வியாபாரிகள், போதைவஸ்து பாவனையாளர்களை கண்டறிய தனியான புலனாய்வு பிரிவொன்றை களமிறக்குமாறுபாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான சார்ள்ஸ் நிர்மலநாதன் , போதைவஸ்து கடத்தல் தடுப்பு என்ற பெயரில் இராணுவ சோதனை சாவடிகளில் மக்கள் அவலங்களை சந்திப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட நுழைவாயிலில் இருக்கின்ற சோதனை சாவடி ஊடாக மன்னார் மாவட்டத்துக்குள் வருபவர்கள்,வெளியே செல்பவர்கள் மிகப்பெரிய நெருக்கடிகளை சந்திக்கின்றனர். குறிப்பாக அரச சேவையாளர்கள் முதல் சாதாரண பயணிகள் வரை அந்த சோதனை சாவடியில் இறக்கி ஏற்றப்படுகின்றனர் .மன்னார் மாவட்டத்திலிருந்து நீர்கொழும்பு ,பேலியகொடைக்கு செல்கின்ற மீன் வியாபாரிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு மீன்களை கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதே போன்றே ஏனைய வியாபாரிகளினதும் அனைத்து பொருட்களும் இறக்கி ஏற்றப்படுகின்றன. இது தொடர்பில் சோதனை சாவடியில் உள்ள அதிகாரிகளிடம் கேட்டால் போதைவஸ்து கடத்தல் நடக்கிறது. அதனால் தான் இந்த சோதனையின் அவர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் மன்னார் தீவை சுற்றி கடல் இருக்கின்றது.எப்படி கடற்படைக்கு தெரியாமல் மன்னார் தீவுக்குள் போதைவஸ்துப்பொருட்களை கொண்டு வர முடியும்?அது மாத்திரம் அல்லாமல் இந்த சோதனை சாவடிகளில் மக்கள் தான் அவலப்படுகின்றார்களே தவிர போதைவஸ்து வியாபாரிகள் தங்கள் போதைவஸ்து வியாபாரங்களை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். கொழும்பில் பல இடங்களில் போதைவஸ்து பிடிபடுகின்றது. அண்மையில் மார வில வீதியில் இலங்கையில் மிகப்பெரியதொரு போதைவஸ்து பிடிபட்டது. ஆனால் இங்கு எந்தவொரு இடத்திலும் சோதனை சாவடி அமைத்து மக்களை கஷ்டப்படுத்த வில்லை.

போதைவஸ்து கடத்தல்களை தடுக்க தனியான புலனாய்வு பிரிவொன்றை உருவாக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுக்கு அது முடியும் .எனவே அவ்வாறான தனியான புலனாய்வுப்பிரிவை உருவாக்கி வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து வியாபாரிகள். போதைவஸ்து பாவனையாளர்களை கட்டுப்படுத்த முடியும்.இது அரசினால் முடியும். ஆனால் அதனை விடுத்து மக்களை அவலப்படுத்துவது மிகப்பெரியதொரு மனவேதனையான விடயம்.

நீங்கள் அந்த இராணுவ சோதனை சாவடி அதிகாரிகளிடம் அறிக்கை கோரினால் அவர்கள் இங்கு போதைவஸ்து கடத்தல் நடக்கின்றது என்று அறிக்கை தருவார்கள். அதனைவிடுத்து நீங்கள் அங்கு இரகசியமாக புலனாய்வு பிரிவினரை அனுப்பி அந்த சோதனை சாவடியில் மக்கள் படுகின்ற வேதனைகளை முழுமையாக பார்க்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் நான் ஒருவரின் பெயரைக்குறிப்பிட்டு உங்களுக்கு அவரின் தொழில் தொடர்பில் கூறியிருந்தேன். ஆனால் அவர் இப்போதும் அரச ஆதரவுடன் தனது தொழிலை தொடர்ந்தும் முன்னெடுக்கின்றார் என்றார்.

# ஈழத்தின் திரைப்பட நடிகை சர்வதேச விருது பெற்றார்



இலங்கை-ஈழ தமிழ் சினிமா பரப்பில் தற்போது பேசுபொருளாக மாறிக் கொண்டிருக்கும் ஒரு திரைப்படம் வெந்து தணிந்தது காடு.

உலக சர்வதேச திரைப்பட விழாக்களில் பலவற்றில் இது பயணித்துக் கொண்டே இருக்கின்றது. கடந்த வாரம் இலங்கை தமிழ் சினிமா பரப்பில் ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தி இருக்கின்றது. 72 வயது கடந்த நிலையில் கலைத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் ஈழத்தின் பழம்பெரும் பாடகியான திருமதி பார்வதி சிவபாதம் சிறந்த குணச்சித்திர நடிகைக்கான சர்வதேச விருது ஒன்றை பெற்றிருக்கின்றார். அந்தமான் நிக்கோபார்ரடில் சர்வதேச திரைப்பட விழாவில் வெந்து தணிந்தது காடு திரைப்படத்திற்காக சிறந்த குணச்சித்திர நடிகை விருதை இவர் பெற்றிருக்கின்றார்.

அதேநேரம் இதே திரைப்படம் இந்தியாவில் இடம்பெறும் உருவட்டி திரைப்பட விழாவில் ஐந்து சர்வதேச விருதுகளை பெற்று இருந்தது. குறித்த படம் சிறந்த இயக்குனர், சிறந்த கதாசிரியர், சிறந்த தயாரிப்பாளர், சிறந்த அறிமுக இயக்குனர், சிறந்த சுவர் படம் ஆகியவற்றிற்காக விருதுகளை பெற்று இருந்தது.

இதுவரை வெந்து தணிந்த காடு திரைப்படம் 9 சர்வதேச விருதுகளைப் பெற்றிருக்கின்றது. தயாரிப்பாளர்களே இல்லாத தளம் ஒன்றில் கிட்டத்தட்ட 3 வருடங்களாக மக்களிடம் இருந்து சேகரித்த பணத்தின் மூலம் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருந்தது.

இத்திரைப்படத்தில் 158 நபர்கள் இணைந்து முதலீட்டு இப்படத்தை உருவாக்கி இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பலரால் அறியப்பட்ட திரைச் செயற்பாட்டாளரான மதிசுதாவின் மூன்று வருடம் தொடர்ச்சியான உழைப்பின் மூலம் இப்படத்தை ஐபோன் கைப்பேசியில் உருவாக்கி முடித்திருக்கிறார். ஈழ தமிழ் சினிமா தரப்பில் சினிமா படங்களுக்கு காணப்படும் எதிர்மறையான விமர்சனங்களுக்கு மத்தியில் வெந்து தணிந்த காடு திரைப்படம் சாதித்துக் காட்டியமை ஈழத்தின் சினிமா படைப்பாளர்களை மேலும் ஊக்கிவித்திருக்கின்றது.

# யுத்த வெற்றியை கொண்டாட நினைவுத் தூபி உருவாக்கத் தேவை இல்லை

## -பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா-

பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

யுத்த வெற்றியை கொண்டாட நினைவுத் தூபி உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று தெரிவித்துள்ள முன்னாள் இராணுவத் தளபதியான பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, தூபியின் உருவாக்கம் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றை அடையாளப்படுத்தும் என்றால் அதனை வரவேற்கலாம் எனவும் கூறியுள்ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், தற்போது சந்தஹிரு சாய தூபி தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. யுத்த வெற்றியை கொண்டாட தூபியை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இது எமது கலாசாரம் அல்ல, தூபியின் உருவாக்கம் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றை அடையாளப்படுத்தும் என்றால் அதனை வரவேற்கலாம்

இதேவேளை இந்திய மீனவர்கள் வடக்கின் கடலை அழித்துக்கொண்டுள்ளனர், வடக்கு கிழக்கில் அவர்களின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்துகொண்டுள்ளது. நாகதீபம் பக்கம் சென்றால் இவற்றை எம்மால் அவதானிக்க முடியும். இந்த செயற்பாடுகளை நிறுத்தியாக வேண்டும். அதற்கான அனுமதியை எமது கடற்படைக்கு வழங்க வேண்டும். இந்திய மீனவர்கள் எமது மீனவர்களை தாக்குவதும், பீன்பிடி உபகரணங்களை அழிக்கின்றனர் என்றால் அந்த அசம்பாவிதங்களை நிறுத்த வேண்டும் என்றார்.

## -மின்தடை ஏற்பட்டமை தொடர்பில்-

# சீ.ஐ.டி விசாரணை நடத்தப்பட வேண்டும்



பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

நாடு பூராகவும் வெள்ளிக்கிழமை மின்தடை ஏற்பட்டிருந்த போது, பாராளுமன்றத்தில் மின்தடை ஏற்பட்டமை தொடர்பில் சீ.ஐ.டி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி பிரதம கொரடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் கூறுகையில், இலங்கை மின்சார சபைக்கே மின்விநியோக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் பாராளுமன்றத்தின் பாதுகாப்பு முக்கியமானது. இதனால் இது தொடர்பாக சீ.ஐ.டி. யினரிடம் ஒப்படைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தை பாராளுமன்றம் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். மின்பிறப்பாக்கிகள் தயார்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நான் சபாநாயகரிடம் கேட்கின்றேன். பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அமைச்சுகள் மீதான விவாதத்தை நடத்தும் நேரத்திலேயே இங்கு தடைப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

# திட்டமிட்ட சதிகள் இருந்தால் அனுமதியோம்

பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மின்தடைக்கு பின்னால் ஏதேனும் திட்டமிட்ட சதிகள் இருந்தால் அதனை அனுமதிக்க மாட்டோம் என்றும் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டனர்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா எம்.பி கூறுகையில், நாடு முழுவதும் தற்போது மின்தடை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் பாராளுமன்றத்திற்கும் மின்சாரம் இல்லை. பாராளுமன்றமும் இப்போது மின்பிறப்பாக்கியிலேயே தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றது என்றார். இவ்வேளையில் பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ச இந்த நேரத்தில் ஏதேனும் திட்டமிட்ட சதிகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதனை அனுமதிக்க மாட்டோம். அது தொடர்பாக சரியான நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# தேசிய பாதுகாப்பு கொள்கையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை

## -அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு-

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்

முழு பாதுகாப்பு கட்டமைப்பிலும் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி மற்றும் பின்னடைவு காரணமாக கடந்த காலங்களில் இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கிய சவால்களை மீண்டும் எதிர்கொள்ள இடமளிக்கப் போவதில்லை.தற்போதுள்ள தேசிய பாதுகாப்பு கொள்கையை மீளாய்வு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அரச பாதுகாப்பு நீர்ப்பாசன மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், தொற்றுநோய்கள், பேரழிவுகள், பயங்கரவாத நடவடிக்கைகள், போதைப்பொருள், வன்முறை,தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், மனித கடத்தல், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சுற்றுச்சூழல் மற்றும் அழிவுகள் போன்ற அனைத்து வகையான அச்சுறுத்தல்களிலிருந்தும் மக்களைப் பாதுகாப்பதும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் முதல் கடமையாக அரசாங்கம் கருதுகிறது. எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள விரிவான தேசிய பாதுகாப்பு மூலோபாயம் செயல்படுத்தப்படும். நாட்டிலுள்ள அனைத்து புலனாய்வு சேவைகளையும் வலுப்படுத்த அனைத்து புலனாய்வு சேவைகளையும் அணிதிரட்டுதல், தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியை மேம்படுத்துதல். ஆயுதப்படைகளை தயார்நிலையில் வைக்கவும் நாட்டின் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் தற்போதுள்ள தேசிய பாதுகாப்பு கொள்கையை மீளாய்வு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆணையை தற்போதைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் பக்கத்திற்கு திருப்ப ஆலோசனை வழங்கியவர் யார்?

## -ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கேள்வி-



பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் வவுணதீவில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கத்திற்கு திருப்ப ஆலோசனை வழங்கியவர் யார் என்றும், மற்றும் ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அந்தச் சம்பவத்தை ஐ.எஸ் பொறுப்பேற்பதற்கு அழுத்தம் கொடுத்தவர்கள் யார் என்றும் தகவல்களை வெளியிட வேண்டும் என்று ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனுரகுமார திஸாநாயக்க அதன்போது கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்டப்படுவதை தடுப்பதற்காக இந்தப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டிய 5 விடயங்கள் உள்ளன.

அதில் முதலாவதாக வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகள் கொலை சம்பவமானது சஹ்ரான் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டமையாக பின்னர் வெளியாகியிருந்தது. ஆனால் அதனை முன்னாள் விடுதலைப் புலிகள் செயற்பாட்டாளர்களின் பக்கத்திற்கு கொண்டு செல்ல ஆலோசனை வழங்கியது யார்? 52 நாட்கள் ஆட்சிக் காலத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்படியென்றால் அந்த நேரத்தில் அவர்களை கைது செய்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலை தடுத்திருக்கலாம். ஆனால் அந்த சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கத்திற்கு திருப்ப வேண்டுமென்றே செய்யப்பட்டதா? என்பதனை வெளியிட வேண்டும்.

இரண்டாவதாக, சஹ்ரான் உள்ளிட்ட குழுவினருக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் சம்பளம் வழங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. அவ்வாறு அவர்களுக்கு சம்பளம் வழங்கியது யார்? அந்த சம்பளத்திற்காக பரிந்துரைத்தது யார்? அந்த சம்பளம் யாருக்கு வழங்கப்பட்டது என்பதனை வெளியிட வேண்டும்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
சனிக்கிழமை 04 டிசம்பர் Saturday 04 December 2021

# மற்றொரு பேராபத்தைத் தவிர்க்க கூட்டுப் பொறுப்புணர்வு அவசியம்

டெல்டாவின் தீவிரம் அடங்குவதற்குள் எதிர்பார்த்தவாறே ஓமிக்ரோன் புதிய உருத் திரிபு வைரஸ் இலங்கைக்குள் நுழைந்துள்ளது.

தென்னாபிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் இலங்கை உட்பட 30 வரையான நாடுகளில் இதுவரை பரவியுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் வேகமாகப் பரவக்கூடியது. அதிக நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தக்கூடியது. அத்துடன், இறப்புக்கள் அதிகரிக்கவும் வழி வகுக்கும் என வைரஸ் பரவல் ஆரம்பத்திலேயே சுகாதார நிபுணர்கள் ஒரு தரப்பினரால் எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் டெல்டா உருத் திரிபு வைரஸ் பாதிப்பை விட ஆரம்ப கட்ட நிலையில் ஓமிக்ரோன் திரிபு பாதிப்பு குறைவாகவே உள்ளது. அவதானிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவி ஏஞ்சலிக் கோட்ஸி தெரிவித்துள்ளார்.

ஓமிரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வாசனை இழப்பு, சுவை இழப்பு, அல்லது கடுமையான காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளை அனுபவிப்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே ஓமிக்ரோன் குறித்து தேவையின்றி அச்சப்படத் தேவையில்லை எனவும் தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏஞ்சலிக் கோட்ஸி குறிப்பிட்டுள்ளார்.

ஆக மொத்தத்தில் ஓமிக்ரோன் உருத் திரிபு குறித்து அறிவியல் ரீதியில் உறுதிப்படுத்தப்படாத தகவல்களே இதுவரை வெளியிடப்பட்டு வருகின்றன. அதேநேரம் இதனை கவலைக்குரிய திரிபாக உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்தியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் புதிய தொற்று மேலும் பரவாமல் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை சுகாதார துறைக்கு உள்ளது.

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலம் நெருங்கும் நிலையில் அதிகளவில் மக்கள் ஒன்றுகூடக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் என்பதால் இது தொற்று பரவல் வேகமடைவதற்கான ஏது நிலை அதிகமாகவே உள்ளது.

எனவே, நிலைமைக் கருத்தில் கொண்டு இம்முறையும் பண்டிக்கைக் கொண்டாட்டங்களை பொறுப்புணர்வுடன் முன்னெடுத்து செல்ல வேண்டிய பொறுப்பு பொதுமக்களுக்கு உள்ளது.

அதேநேரம் சுகாதாரத் தரப்பினரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் பரவல் தீவிரமடைவதைத் தவிர்க்க முடியாது.

நாட்டில் ஏற்கனவே பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளா்த்தப்பட்டுள்ளன. மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பொருட்படுத்தாமல் அதிகளவில் நிகழ்வுகளில் ஒன்றுகூடுவதை அவதானிக்க முடிகிறது.

இதனைவிட பாடசாலைகள் முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கான சுகாதார வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்படுவதை பெரும்பாலும் காண முடியவில்லை. பெரும்பாலான பாடசாலைகள் 100 வீத மாணவர் வரவுடன் சுகாதார வழிகாட்டல்களை கருத்தில் எடுக்காமல் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் ஓமிக்ரோன் அச்சத்தின் மத்தியில் சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக கண்காணித்து அமுல் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஆபத்துக்களைக் குறைக்க முடியும்.

ஆரம்ப நிலையில் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்காவிட்டால் விளைவுகள் விபரீதமாக நேரிடலாம். ஏற்கனவே டெல்டாவில் விளைவுகளால் ஆயிரக்கணக்கில் உயிர்கள் காவு கொள்ளப்பட்ட நிலையில் மற்றொரு அனர்த்தத்தை தடுத்தே ஆகவேண்டியுள்ளது.

அத்துடன், இன்னுமொரு முடக்க நிலையை இலங்கையால் தாங்கிக்கொள்ள முடியாது. அவ்வாறு ஒரு முடக்க நிலைக்குச் சென்றால் அது கொரோனாவின் பாதிப்புக்களை விட அதிக பாதிப்புக்களையே ஏற்படுத்தும். ஏற்கனவே பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் இது பட்டினிச் சாவுகள் வரை பேராபத்தை ஏற்படுத்தலாம். எனவே ஓமிக்ரோன் பரவலை ஆரம்பத்திலேயே கண்டிறிந்து தடுப்பதுடன், அது மேலும் நாட்டுக்குள் நுழையாதவாறு எல்லைக் கட்டுப்பாடுகளையும் கடுமையாக்க வேண்டிய தேவையுள்ளது.

பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு பொறுப்பின்றி எல்லைகளை முழுமையாகத் திறந்து சர்வதேச பயணிகளை அனுமதிப்பது ஆபத்து என்ற சுகாதாரத் தரப்பினரின் எச்சரிக்கைகளை அரசு முழுமையாகக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

தென்னாபிரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் ஓமிக்ரோன் தன்மையைப் புரிந்துகொள்ள ஆய்வுகளை முடுக்கிவிட்டுள்ளனர். இந்த ஆய்வு முடிவுகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதுவாக இருந்தாலும் வருமுன் தடுப்பதே புத்திசாலித்தனமானது என்பதை அரசும் சுகாதாரத் தரப்பினரும் பொதுமக்களும் புரிந்துகொண்டு நடப்பதே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லது.

# ஓமிக்ரோன் உருத்திரிபு வைரஸ் உலகளாவிய புதிய அச்சுறுத்தல்



விஞ்ஞானிகள் ஓமிக்ரோன் (ஆ.1.1.529) என்ற கோவிட்-19 இன் புதிய மாறுபாட்டைக் கண்டறிந்துள்ளனர், இதை அக்கறை கொள்ள வேண்டிய மாறுபாடாக (variant of concern & VOC) உத்தியோகபூர்வமாக அங்கீகரிப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


இந்த மாறுபாடு தென்னாபிரிக்காவில் தோன்றியதாகத் தெரிகிறது. ஆனால் ஏற்கனவே பல நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. அசாதாரண நட்சத்திர வடிவ பிறழ்வுகள் இந்த மாறுபாட்டை டெல்டா மாறுபாட்டை விட மிக அதிக தொற்றும் தன்மை, மற்றும் தடுப்பூசி எதிர்ப்பு திறன் உள்ள மாறுபாடாக்குவதாக ஆரம்ப அறிகுறிகள் உள்ளன.

உலக சுகாதார அமைப்பு அதன் அறிக்கையில், டெல்டா மாறுபாடு உட்பட ஏனைய மாறுபாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த மாறுபாட்டால் அதிகரித்தளவில் மீண்டும் நோய் தொற்றும் அபாயம் இருப்பதாக ஆரம்ப சான்றுகள் தெரிவிக்கின்றன என்று கூறியுள்ளது. தென்னாபிரிக்காவில் உள்ள அனைத்து மாகாணங்களிலும் இந்த மாறுபாட்டினால் உருவாகும் நோய்தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

நவம்பர் 9 ஆம் திகதி சேகரிக்கப்பட்ட மாதிரியிலிருந்துதான் ஓமிக்ரோன் மாறுபாட்டின் முதல் உறுதிப்படுத்தப்பட்ட நோய்தொற்று இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், இரண்டே வாரங்களில், தென்னாபிரிக்காவில் அதிவிரைவாக ஆதிக்கம் செலுத்தும் விகாரமாக அது உருவெடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவில் புதிய நோய்தொற்றுக்களின் ஏழு நாள் போக்கு சராசரி இரண்டே வாரங்களில் நாளாந்த புதிய நோய்தொற்றுக்களை 265 இல் இருந்து 1043 இற்கும் அதிகமாக நான்கு மடங்காக அதிகரிக்கச் செய்துள்ளது.

தென்னாபிரிக்காவில் தற்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்களில் 75 சதவீதம் சமீபத்திய மாறுபாட்டினால் உருவானதாகும். இது விரைவில் 100 சதவீதத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்காவின் சிறிய வடகிழக்கு மாகாணமான அதிக நகரமயமாக்கப்பட்ட குட்டெங் பகுதியில்தான் புதிய நோய்தொற்றுக்கள் வெடித்து பரவி வருகின்றது.



இது நாட்டின் நிலப்பரப்பில் 2 சதவீதத்திற்கும் குறைந்த பரப்பளவை கொண்ட பகுதியாகும், இருப்பினும் நாட்டின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் இங்குதான் வசிக்கின்றனர்.

நெல்சன் ஆர். மண்டேலா மருத்துவ பள்ளியில் உயிரித் தகவலியல் நிபுணரும், மற்றும் தொற்றுநோய்க்கான பதில் மற்றும் கண்டுபிடிப்பு மையத்தின் (Centre for Ep-idemic Response Innovation) இயக்குநருமான வைத்தியர் துலியோ டி ஒலிவேரா, இந்த மாறுபாடு அதன் பிறழ்வு மேலோங்கிய மட்டத்தினால் உண்மையில் கவலையளிப்பதாக உள்ளது என்று விவரித்தார். மேலும், இந்த புதிய மாறுபாடு, மனித சுவாச உயிரணுக்களுடன் ஒட்டிக்கொள்ள பயன்படும் வைரஸின் ஸ்பைக் புரதத்தில் உள்ள 32 பிறழ்வுகள் உட்பட, 50 இற்கும் மேற்பட்ட பிறழ்வுகளைக் கொண்டுள்ளது என்கிறார். புதிய மாறுபாட்டை எதிர்த்துப் போராடுவதில் தடுப்பூசிகளும் சிகிச்சை முறைகளும் குறைந்த திறனுள்ளவையாக இருக்கும் என்ற கவலை ஏற்படுவதாக வைத்தியர் டி ஒலிவேரா விளக்கினார்.

ஒட்டுமொத்த உலக மக்களுக்கும் அச்சுறுத்தலின் தீவிரத்தை வெளிப்படுத்தி, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான ஐரோப்பிய மையங்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டன, அது, இந்த மாறுபாட்டை டெல்டாவுடன் ஒப்பிடுகையில் அதன் நோயெதிர்ப்புத் தப்பிக்கும் திறன் மற்றும் அதிகரித்த பரவும் திறனின் அடிப்படையில் பார்த்தால், ஐரோப்பாவில் மேலதிக நோய்தொற்றின் உருவாக்கம் மற்றும் சமூக பரவலின் நிகழ்தகவு உச்சபட்சத்தில் இருக்கும் என நாங்கள் மதிப்பிடுகிறோம் என்று எச்சரிக்கிறது. அது மேலும், ஐரோப்பாவில் டெல்டா மாறுபாடு மீண்டும் எழுச்சி பெறும் சூழ்நிலையில், ஓமிக்ரோனின் அறிமுகம் மற்றும் அதன் மேலும் பரவும் சாத்தியத்தின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும் என்று கூறியது.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக தொற்றுநோய்களை ஆய்வு செய்து வரும் ஒரு சிக்கல் அமைப்பு இயற்பியலாளர் வைத்தியர் யானீர் பார்-யாம் இன் கருத்துப்படி, தற்போதைய தோராயமான மதிப்பீடுகள், ஓமிக்ரோன் மாறுபாடு அசல் மாறுபாட்டை விட ஆறு மடங்கு அதிகமாகவும், டெல்டா மாறுபாட்டை விட இரண்டு மடங்கு அதிகமாகவும் நோயை பரப்பும் திறன் கொண்டது என்பதை சுட்டிக்காட்டுகின்றன. மேலும், ஓமிக்ரோன் காரணமான இறப்பு விகிதம் அசல் மாறுபாட்டை விட எட்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் பார்-யாம் மதிப்பிடுகிறார்.

T&cell நோயெதிர்ப்பு நிபுணர் வைத்தியர் அந்தோனி லியோனார்டி, ஓமிக்ரோன் மாறுபாடு அநேகமாக எல்லா இடங்களிலும் உள்ளது, இப்போது இது பிறழ்வடையும் ஒரு பெரிய திறனைக் கொண்டுள்ளது. இது டெல்டாவை விஞ்சிவிடும் நிலையில், இன்னும் அதிகமான நோய்தொற்றுக்களை உருவாக்கப் போகிறது. எனவே இது டெல்டாவை விட வேகமாக வெளிப்படும் என்று தெரிவித்தார்.

ஐரோப்பிய அரசாங்கங்களும் அமெரிக்காவும் தென்னாபிரிக்காவில் உள்ள நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை தீவிரமாக்கி வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தை பின்பற்றி, பைடன் நிர்வாகமும் வெள்ளிக்கிழமை பிற்பகல் தென்னாபிரிக்க நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை விதித்தது. கூடுதல் தகவல் கிடைக்கும் வரை, ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தென்னாபிரிக்கா மற்றும் பிற ஏழு நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு கூடுதல் பயணக் கட்டுப்பாடுகளை நான் விதிக்கிறேன். இந்த புதிய கட்டுப்பாடுகள் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என்று பைடன் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த பயணக் கட்டுப்பாடுகள் தற்காலிக நிறுத்த நடவடிக்கைகளின் தன்மையைக் கொண்டுள்ளன. இது உலகளவில் மாறுபாட்டின் பரவலைத் தடுக்க மிகவும் தாமதமாக நடைமுறைக்கு வரும். அமெரிக்கா மற்றும் பிரதான ஐரோப்பிய நாடுகளில் வைரஸ் தொடர்புபட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்படுவதானது, மாறுபாடு நாட்டிற்குள் நுழைந்திருந்தால், அது ஏற்கனவே வேகமாக பரவிக் கொண்டிருக்கும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

புதிய திரிபு கண்டுபிடிக்கப்பட்டு அறிவிக்கப்படுவதற்கு முன்பே நோய்தொற்று விகிதங்கள் பொதுவாக அதிகரிக்கும் குளிர்காலத்திற்குள் நுழைகையில், குறிப்பாக ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உட்பட, உலகளவில் கோவிட்-19 நோய்தொற்றுக்கள் ஏற்கனவே வெடித்து பரவியுள்ளன.






பைடன் அமெரிக்கர்களை தடுப்பூசி போட்டுக்கொள்ள அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளை எடுத்துக்கொள்ள ஊக்கப்படுத்துகிறார். நீங்கள் தடுப்பூசி போடவில்லை என்றாலோ, அல்லது உங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்படவில்லை என்றாலோ, இதுவே அதற்கான நேரம் என்று பைடன் கூறினார்.

கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட தடுப்பூசி ஒரு முக்கியமான கருவிதான் என்றாலும், தடுப்பூசி என்பது தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவரும் ஒரு மாயவித்தை தோட்டா அல்ல என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். தீவிரமான பரிசோதனை, தொடர்புத் தடமறிதல் மற்றும் தனிமைப்படுத்துதல் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் பூட்டுதல்கள், நோய் தொற்றுப் பரவுவதை கட்டுப்படுத்த மிகவும் அவசியமாகும். சர்வதேச அளவில் வைரஸை தொடர்ந்து பரவ அனுமதிப்பதானது, தடுப்பூசிகள் வழங்கும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தவிர்க்கக்கூடிய ஓமிக்ரோன் போன்ற புதிய மற்றும் அதிக தொற்றும் தன்மையுள்ள மாறுபாடுகள் உருவெடுப்பதற்கு வழிவகுக்கும் என்று விஞ்ஞானிகள் பலமுறை எச்சரித்துள்ளனர்.

-பெஞ்சமின் மேடியஸ்
(wsws.org)-

# தொழில் முயற்சியாளர்களின் தரத்தை உயர்த்துவதற்கு உதவுங்கள்

## -ஜெர்மன் தூதரக அதிகாரிகளிடம் உதவி அரசாங்க அதிபர் கோரிக்கை-



யாழ். மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தொழில் தரத்தை ஊக்குவிப்பதற்கு உதவி செய்யுமாறு யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தூதரக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தூதரக அதிகாரிகள் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்கள் பங்கு பற்றிய கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் 7,313 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

அவர்களில் 2 ஆயிரத்து 834 பெண் தொழில் முயற்சியாளர்கள் காணப்படுவதுடன் 307 பெண் தலைமை தாங்கும் தொழில் முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

போட்டி மிகு வர்த்தக துறையில் தமது உற்பத்தியை சிறந்த முறையில் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டங்களை ஜேர்மன் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களை நாம் அடையாளப்படுத்தி வைத்துள்ளோம் அவர்களை மேலும் விருத்தி செய்ய உதவுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இலங்கைக்கான ஜெர்மனிய தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், ஜெர்மன் தூதரக அதிகாரிகள் மற்றும் தொழில் துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (75)

# வேலணை பிரதேச சபையின் பாதீடு தவிசாளரின் மேலதிக வாக்கினால் நிறைவேற்றம்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குற்பட்ட வேலணை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் தவிசாளரின் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின், வரவு செலவுத் திட்டத்திற்கான விசேட கூட்டம் நேற்று சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றிருந்தது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர்.

பின்னர் சபையின் தவிசாளர் மேலதிகமாக ஒரு வாக்கினை செலுத்த முடியும் எனும் உள்ளூராட்சி மன்ற சட்டத்திற்கு அமைவாக தவிசார் தனது வாக்கினை ஆதரவாக செலுத்தியதன் மூலம் வரவு-செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

20 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக 8 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும்,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாக தலா ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (40 )

## போராட்டம் நடத்திய மக்களை சந்தித்த ஆளுநர்;

# காணி உரிமம் அல்லாதவர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்



மாதகல்-கீரிமலை பகுதியில் கடற்படைக்கு தேவைக்காக தமது நிலம் அபகரிக்கப்படப் போவதாக போராட்டம் நடத்திய மக்களை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

கடற்படையின் தேவைக்காக தமது நிலம் அபகரிக்கப்படப் போவது தொடர்பில் வட மாகாண ஆளுநருக்கு காணி உரிமையாளர்கள் தமது பக்க நியாயங்களை எடுத்துரைத்தனர்.

ஒவ்வொருவராக தமது பிரச்சினைகளை கூறுமாறு ஆளுநர் கேட்டதற்கிணங்க ஒவ்வொருவரும் தமது பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநரிடம் தமது காணிகள் தொடர்பில் தெரிவித்தனர்.

இதன் போது சிலர் தமது காணிகள் தொடர்பில் சட்ட நீதியான ஆவணம் இல்லாமை தொடர்பில் கண்டறியப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வடமாகாண ஆளுநர் மக்கள் தமது காணிகள் தொடர்பில் சட்டரீதியான ஆவணத்தை பெறாது உள்ளனர்.

காணிகள் தொடர்பில் மக்கள் எவ்வாறான முறைப்பாடுகளை வைத்துள்ளார்கள் அவர்களுக்கு எவ்வாறான பதில்கள் வழங்கப்பட்டது தொடர்பில் அறிவுறுத்துமாறு கூறியிருக்கிறேன்.

நான் எந்த இடத்திலும் காணிகளை பிடித்துக் கொடுக்குமாறு யாரிடமும் கூறவில்லை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்து முன்னோக்கி செல்வதே சிறந்தது.

பல காணி உரிமையாளர்கள் தமது காணிகள் தொடர்பில் பிரதே செயலாளர்களுக்கு முறைப்பாடுகளை வைத்துள்ளார்கள் அவர்களுக்கான உரிய பதில்கள் கிடைக்காமை தெரிகிறது.

சிலர் தமது காட்சிகளுக்காக இழப்பீடு கோரியுள்ள உள்ள நிலையில் அவர்களிடம் சட்டரீதியான ஆவணம் இல்லாமை தெரிகின்ற நிலையில் அவர்களுக்கு இழப்பீட்டை எவ்வாறு வழங்குவது தொடர்பில் பிரச்சினை இருக்கிறது.

காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கிறது பிரச்சினைகளை ஆராயும் இடைவெளி அதிகரித்திருக்கிறது அதனை நாம் சரி செய்ய வேண்டும்.

ஆகவே,குறித்த காணி விவகாரம் தொடர்பில் பிரதேச செயலாளர்கள் ஊடாக எடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் சங்கானை மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (75)

# ரயிலுடன் மோதுண்டு பட்டா, சாரதி பலி



தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் ரயிலிடன் மோதி பட்டா ரக வாகனம் நேற்று மாலை விபத்துக்குள்ளாகியுள்ளதோடு அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலுடன் கடவையை கடக்க முற்பட்ட பட்டா ரக வாகனமே மோதுண்டுள்ளது.

இதன்போது வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (75)

# கிராமிய வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக மாற்றும் செயற்றிட்டம்



கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் -கிராமிய வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அண்மையில் கரவெட்டி பிரதேசத்தில் 12வீதிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவில் உடுப்பிட்டி,உடுப்பிட்டி தெற்கு,உடுப்பிட்டி வடக்கு,சமரபாகு, வல்வெட்டி,கரணவாய் வடக்கு ,கரணவாய் மத்தி ,நெல்லியடி வடக்கு,அல்வாய் தெற்கு,அல்வாய் கிழக்கு,அல்வாய்,நெல்லியடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 12 வீதிகளுக்கே இவ்வாறு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.வீதிகளுக்கான அடிக்கல்லை அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் ச.இராமநாதன் நாட்டி வைத்திருந்தார்.குறித்த 12வீதிகளும் 24மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (13)

# மின்சாரம் தடை

இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05மணிவரை யாழ்ப்பாணம், வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி உட்பட பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

யாழ் .பிரதேசத்தில் கலைவாணி வீதி, கோப்பாய் கல்வியியற் கல்லூரி , பந்திங்சென்டர் , மண்டபம் , கோண்டாவில் நீர்வழங்கல்சபை , கோப்பாய் இராணுவமுகாம் , இராஜேஸ்வரி கோண்டாவில்கிழக்கு , கலைவாணி -திருநெல்வேலி , பல்கலைக்கழகவிடுதி , கிருஷ்ணன்கோவிலடி , பொற்பதி , புகையிரத நிலைய வீதி சந்தி , இராஜவீதிசந்தி , இராஜவீதி கோப்பாய் , திருநெல்வேலி , வாமாஸ் வீதியிலும் வடமராட்சியில்

சுப்பர்மடம் ஐஸ்தொழிற்சாலை , மந்திகை மருத்துவமனை , தொலைத்தொடர்பு நிலையம் மாலுசந்தி , இலகடி , இன்பருட்டி , காந்தியூர் , மாலுசந்தி , மந்திகை அம்மன் கோவில் , அல்வாய் , நாவலடி , ஸ்ரீலங்கா பாடசாலையடி , வியாபாரிமூலை , திக்கம் , தேவரையாழி வதிரி , மனோகரா , வதிரி, அரசடி ,வடமராட்சி கிழக்கு பகுதியில் கட்டைக்காடு 55 ஆம்பிரிவு இராணுவமுகாம் , ஆழியவளை , கட்டைகாடு , கட்டைகாடு இராணுவமுகாம் ( 55 ஆம்பிரிவு ) , கேவில் , முள்ளியான் , வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம் , இடங்களிலும் , கிளிநொச்சி பிரதேசத்தில் சி.எல்.ஐ இராணுவமுகாம் , 16 இ.எஸ்.ஆர் உடுத்துறை , 12 வத்திராயன் , வெற்றிலைக்கேணி , வெற்றிலைக்கேணிகடற்படைமுகாம் ஆகிய 11 இ.எஸ்.ஆர் இராணுவமுகாம் , 59 ம்பிரிவுஇராணுவமுகாம் , 6 ஆவது எஸ்.எல்.ஏ.எஸ்.சி இராணுவமுகாம் , வற்றாப்பளை விமானப்படைமுகாம் ரூ ஐஐ , வற்றாப்பளை இராணுவமுகாம் எரிபொருள் நிரப்புநிலையம் , எஃப்.எம்.ஏ ( எம்.எல்.டி ) இராணுவமுகாம் நந்திக்கடல் , ஹைட்றாமணி , வற்றாப்பளை விசேட அதிரடிப்படைதலைமையகம் , வற்றாப்பளை , கேப்பாப்புலவு , முள்ளியவளை , பிலாக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (21)

# இன்று பதில் பாடசாலைகள் நடைபெறும்

இன்று சனிக்கிழமை அனைத்து தரங்களுக்குமான பதில் பாடசாலைகள் நடைபெறும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக நடைபெறாத பாடசாலைகளுக்கான பதில் பாடசாலைகள் இன்று சனிக்கிழமை நடைபெறும் எனவும், பதில் பாடசாலைகள் அனைத்து தரங்களை கொண்ட வகுப்பினர் அனைவருக்கும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (21)


## Jaffna College Alumni Association
## Notice of the AGM

The Annual General Meeting of the Jaffna College Alumni Association will be held on **Saturday, the 18th of December 2021 at 10 a.m. in Ottley Hall, Jaffna College.**

There will be a worship service at the Cathedral Church at Vaddukoddai at 9 a.m. prior to the meeting.

Personal invitations will not be sent to the members since this is a re-scheduled meeting. Members are requested circulate this notice among their alumni circles.

Participants are required to fully adhere to the **COVID – 19** regulations in effect in Sri Lanka.

**M. Thiruvarangan**
**Secretary, Jaffna College Alumni Association**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ALLIED HEALTH SCIENCES

**WALK-IN INTERVIEW**

**Temporary Demonstrator in Pharmacy**

Walk –in Interview for the post of Temporary Demonstrator in Pharmacy will be held on 14.12.2021 at 10.00 a.m in the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note**- Candidates who are awaiting for the results of the final examinations can also attend the interview.

**SALARY SCALE** –Rs.40,920/=p.m (fixed)

In addition to the above salary, allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and **self-prepared applications.**

**Registrar,**
**University of Jaffna.**
**03.12.2021**

# இலங்கை இராணுவம், தன்னுடைய நாட்டு மக்களையே கொல்லும் அளவிற்கு கொடூரமானது

## - ரவிகரன் சுட்டிக்காட்டு-



இலங்கை இராணுவத்தினர் தன்னுடைய நாட்டு மக்களையே கொலைசெய்யும் அளவிற்கு கொடூரமானவர்கள் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - ஒதியமலைப் படுகொலையின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி இந்த ஒதியமலைப் பகுதியிலே இடம்பெற்ற ஒரு கொடூரமான படுகொலைச் சம்பவத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கு எமது அஞ்சலிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த ஒதியமலைப்படுகொலை தொடர்பில் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்போது, இராணுவ உடை தரித்த இனந்தெரியாதோர் இந்த கொலைகளைச் செய்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு நாட்டிலே தன்னுடைய மக்களையே கொலைசெய்யும் அளவிற்கு, கொடூரமான இராணுவம் இருந்ததெனில் அது இலங்கயில்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறிப்பாக கடந்த 1984. 12.02 அன்று அதிகாலை இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்களை வீடுவீடாகச் சென்று, பொது நோக்கு மண்டபத்திற்கு அழைத்துவந்து 27 பேரை ஈவிரக்கமின்றி படுகொலை செய்தது மாத்திரமின்றி, மிகுதி ஐந்து பேரை வேறு இடத்திற்கு அழைத்துச்சென்று அவர்களையும் மிக மோசமான முறையில் படுகொலைசெய்துள்ளார்கள்.

இவ்வாறான மிக மோசமான பல செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது சர்வதேசம் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதே எனது கேள்வியாகும்.

கடந்த காலங்களிலிருந்தே எமது தமிழ் மக்கள்மீது மிகமோசமான கொடுமைகளையும், சித்திரவதைகளையும் இந்த நாட்டுபடையினர் மேற்கொண்டுவருகின்றனர் என்பது இதன் ஊடாக வெளிச்சத்திற்கு வருகின்றது.

இந்த படுகொலைச்சம்பவத்தைப் போன்று, பல படுகொலைச் சம்பவங்களையும், பல துன்பியலான சம்பவங்களையும் எமது தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர்.

இவ்வாறான துன்பியல் மிக்க சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருமாறுதான் எங்களுடையவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றனர். தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்கி, தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிசெய்யுமாறுதான் கேட்கின்றோம்.

மேலும் இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட 32பேருடைய ஆத்மாக்களும் சாந்தியடையவேண்டும். இப்படியன கொடூரங்கள் இனியும் இந்த நாட்டிலே நடக்காமல் தமிழர்களாகிய நாம் நிம்மதியாக வாழ வழி ஏற்படவேண்டும்- என்றார். (56)

பால்நிலை வன்முறைக்கெதிரான
16 நாள் செயற்பாடு - 2021
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
"வறுமையும், வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமை ஒழிப்போம்! வன்முறை தடுப்போம்! சமத்துவமான சமுதாயத்திற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.!"
16 2021
யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# மண்டபம் அமைக்க உதவக் கோரிக்கை



முல்லைத்தீவு- ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபிக்கு அருகில் மண்டபம் அமைப்பதற்கு உதவுங்கள் என ஒதியமலை கிராம மக்கள் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் 1984 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அரசியல்வாதிகளிடம் படுகொலை நாள் நினைவு கூரப்படும் போது இட வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் நினைவு தூபிக்கு அருகில் மண்டபம் அமைப்பதற்கு உதவுங்கள் என கோரிக்கை விடுத்துள்ளனர்

# அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை காலை 6.30 மணிக்கு முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பு அருள்மிகு வேல்முருகன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ லி.கபிலனின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு -பெரியகுளம் கிராம மக்கள் யானைகளினால் பெரும் தொல்லையினை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் ஆடு வளர்ப்பில் ஈடுபட்ட நபர் ஒருவர் இரவு காவலில் ஈடுபட்டிருந்த போது யானை தாக்கியதில் படுகாயமடைந்து உள்ளார். 21 குடும்பங்கள் வரையில் தற்போது இக்கிராமத்தில் மீளக் குடியமர்ந்து விவசாய முயற்சிகளிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

யானை வெடிகளுக்குக் கூட யானைகள் அஞ்சாமல் மக்களை யானைகள் தாக்குவதாகவும் தெரிவிக்கும் பெரியகுளம் மக்கள் யானைகளை தூர இடங்களுக்கு துரத்திச் சென்று விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யானைகளினால் விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெருமளவு பணம் செலவழித்து மேற்கொள்ளப்படுகின்ற விவசாய முயற்சிகள் யானைகளினால் அழிக்கப்படுவதனால் பெரும் நட்டத்தினை தாம் எதிர்கொள்வதாகவும் பெரியகுளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (27)

# கெற்பேலியில் வீடு புகுந்து தாக்குதல்; ஒருவர் காயம்



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த குழுவொன்று வீட்டில் இருந்த பொருட்களை அடித்து நொருக்கி அட்டகாசம் புரிந்ததுடன் வீட்டு உரிமையாளரையும் தாக்கிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இதில் கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 39 வயதான நபர் ஒருவர் அடாவடிக் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்-(13)

# மன்னார் மாவட்டத்தில் மழையினால் நெற்செய்கை பாதிப்பு

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழையினால் 2021 /22 பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் தெரிவித்துள்ளார்.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் 2021 /22 காலபோக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 13 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் இதுவரை சுமார் 33 ஆயிரத்து 994 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் விதைப்புக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதைத் தவிர செய்கை பண்ணப்பட்டுள்ள மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கமக்காரர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வெள்ள நீர் தற்போது வழிந்தோடி வருகின்றது. எனினும் பயிர் அழிவு தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் தகவல் திரட்டப்படுவதுடன் பயிர் சேத மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். - என்றார்.(36)

# முல்லைத்தீவு -ஒதியமலை படுகொலை நாள் நினைவு



முல்லைத்தீவு -ஒதியமலைக் கிராமப் படுகொலை நினைவு நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

1984ம் ஆண்டு மார்கழி இரண்டாம் நாள் இக் கிராமத்தில் 32 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.இவ் நினைவு நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதிசாந்தி சிறீஸ்கந்தராஜா, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (27 )

# நுணாவில் விபத்தில் இரு பெண்கள் படுகாயம்

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வீதியால் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை ஏ9 வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.இதில் வீதியால் நடந்து சென்ற நுணாவில் மத்தி பகுதியைச் சேர்ந்த 69வயதான சரோஜாதேவி மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நல்லூரைச் சேர்ந்த 27 வயதான சிவரஞ்சினி ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இந் நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்-. (13)

# நாவலனின் நிதியுதவியில் சிரமதான செயற்பாடு

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீடு மூலமாக வீதி அபிவிருத்தி திணைக்களம் (RDD) ஊடாக 2.7 கிலோ மீற்றர் நீளமான சரவணை - நாரந்தனை வீதியானது இரண்டு கோடி ரூபாய் முப்பத்திரண்டு லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படுகின்றது.

இதற்கமைய வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் மற்றும் தீவகம் வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோர் சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனிடம் வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்திருந்தனர்.

அதாவது மேற்படி வீதியின் அருகாமையில் சூழ்ந்து காணப்படுகின்ற பற்றைகளை அகற்றி வீதியை அகலப்படுத்தி தருவதற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர் . அதற்கமைய சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் அவரது சொந்த நிதி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாயில் தொடர்ச்சியாக ஆறுநாட்களாக இவ்வீதியில் பெக்கோ இயந்திரம் ஊடாகவும், பணியாளர்கள் ஊடாகவும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு முழுமையாக துப்பரவு செய்யப்பட்டுள்ளன .

தீவகம் வடக்கு பிரதேச செயலாளர் திருமதி.ச.மஞ்சுளா தேவி, சூழகம் அமைப்பின் நிர்வாக குழு உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), கருணாகரன் குணாளன் மற்றும் சமூக ஆர்வலர்களான சரவணையூர் கிரிதரன், சரவணை சுபாஸ், ஓய்வுநிலை கிராமசேவகர் சகாதேவன் ஆகியோரும் இச்செயற்பாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னாரில் எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கும் சாத்தியம்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாகச் சென்று வருகின்றமையாலும், போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி நேற்று காலை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாகச் சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

சுகாதாரத் துறையினர் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுக்க மக்களுடைய ஆதரவை எதிர் பார்த்துள்ளோம்.மக்கள் விழிப்பாக இருப்பதன் மூலம் சுகாதாரத் துறைக்கு தமது ஆதரவை வழங்க இயலும். மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தொற்றாளர் இவ்வருடம் 2021 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# ஒமிக்ரான் திரிபு நாட்டுக்குள் நுழைய சகல வசதிகளும் உள்ளன

## -சுகாதார தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ்-



க.பிரசன்னா

கடவுச்சீட்டு மற்றும் விசாவைத் தவிர ஒமிக்ரான் வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதற்கான சகல வசதிகளையும் இலங்கை கொண்டுள்ளதாகவும் நாடு மீண்டும் முடக்கப்படுவதை தவிர்க்கவும் ஒமிக்ரோன் பரவுவதை தடுக்கவும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சுகாதார தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கைக்குள் நுழைபவர்களுக்கு உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையினை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துவரும் நிலையில் அதனை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தயக்கம் காட்டுவதாக சுகாதார அமைச்சில் உத்தியோகபூர்வமற்ற செய்தி பரவியுள்ளது.

இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குள் பரிசோதனை அறிக்கையை வழங்குவதற்கு நாங்கள் பொறுப்பாவோம்.

பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது மற்றும் துரித அன்டிஜன் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது சுகாதார அமைச்சகத்தின் வழிகாட்டல்களின் நலனுக்காக அமைந்துள்ளது.

மேலும் சுகாதார அமைச்சின் சில நிபுணர்கள் உத்தியோகபூர்வமற்ற உத்தரவுகளினால் தொற்றினால் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட நபர்களிடம் கூட மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியவில்லை.

நாடு மீண்டும் முடக்கப்படுவதை தவிர்க்கவும் ஒமிக்ரோன் பரவுவதை தடுக்கவும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுக்கும் சுகாதார அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்க வேண்டும். இல்லையெனில் நாட்டுக்குள் தொற்றை கொண்டுவருவதற்கான வழி உருவாகலாம். எனவே நாட்டுக்குள் ஒமிக்ரோன் தொற்று நுழைந்துள்ள நிலையில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் நாட்டில் புதிய கொவிட் அலை உருவாகுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றதா என்பது தொடர்பில் அறிவியல் ரீதியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டிற்குள் நுழையும் அனைத்து இலங்கையர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சீ.ஆர். பரிசோதனையை கட்டாயமாக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலியிலும் காஸ் அடுப்பு வெடித்தது



நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாத நிலையில் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (75)

நாட்டில் காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் திருநெல்வேலி, முருகன் வீதி பகுதியிலுள்ள வீமொன்றில்

# டெங்கை கட்டுப்படுத்த நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு



யாழ்.மாவட்டத்தில் டெங்கு தீவிரமடைவதை கட்டுப்படுத்தும் வகையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல நிறுவனங்களையும், கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து, பிரதேச செயலர் தலைமையில், பிரதேச மட்ட டெங்கு தடுப்புச் செயலணி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு, நுளம்புக் கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகள் திட்டமிடப்படவுள்ளது. இதற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஒழுங்கிணைப்பாளராக செயற்படவுள்ளார்.

இவ் வாரத்தில் சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வைத்தியசாலைகள், பொது இடங்கள், வணக்கத்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப்பற்ற காணிகள் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான காரணிகள் என்பன கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை பாடசாலைகளில் இவ் வாரத்தில் ஏதாவது ஒரு நாள் தெரிவு செய்யப்பட்டு மாணவர்களின் பங்களிப்புடன் காலை 2 மணி நேரம் சிரமதானம் மூலம் பாடசாலை வளாகம் துப்புரவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

# மூன்றாவது தடுப்பூசி செலுத்துவதில் ஆர்வம் குறைவு; வருத்தத்துக்குறியது என்கிறர் கேதீஸ்வரன்

## -இன்றும், 11 ஆம் திகதியும் தடுப்பூசி செலுத்தும் இடங்கள் குறித்தும் தெரிவிப்பு-

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குமான மூன்றாவது தடுப்பூசி வழங்கும்; செயற்பாடு இன்றும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கோவிட் 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மேலதிகமாக மூன்றாவது (Pfizer) தடுப்பூசி கடந்த 22 ஆம் திகதி முதலும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கடந்த 29ஆம் திகதி முதலும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் மேலதிக தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதில் மக்களிடையே ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றமை வருத்தமளிக்கின்றது.

வடக்கில் ஏற்பட்டுள்ள இறப்புக்களை பார்க்கும் போது வயது முதிர்ந்தவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது. தடுப்பூசி



ஏற்றிக்கொள்வதன் மூலம் மட்டுமே கோவிட் தொற்று ஏற்பட்டாலும் அதன் தாக்கத்தையும் அதன்மூலம் ஏற்படும் இறப்புக்களையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது ஒரு மாத இடைவெளியின் பின்னரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூன்று மாத இடைவெளியின் பின்னரும் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபாம் கோவிட் -19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை (Pfizer) பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான நிலையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும், நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் தடுப்பூசி அல்லது வேறுமருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும் இன்றும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும் யாழ்.மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள்; வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை (Pfizer) பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேருக்கு நேர் மோதுண்ட மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை; ஒருவர் உடல் கருகிப்பலி, இன்னொருவர் காயம்

ஆனமடுவ - சிலாபம் பிரதான வீதியின் சங்கட்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அவை தீப்பிடித்து எரிந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றுமொரு இளைஞர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் ஆனமடுவ முதலக்குளி பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் சிக்கிய தீயினால் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், நிகவெரட்டிய வன்னி ரஸ்னாயக்கபுர பகுதியைச் 21 வயது இளைஞர் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிலாபம் பகுதியில் இருந்து ஆனமடுவ பகுதியை நோக்கிப் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதாகவும் மோதுண்ட சில நிமிடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தீப்பற்றி எரிய ஆரம்பித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பல்வேறு முயற்சிகளை எடுத்த போதிலும், அவை பலனளிக்கவில்லையெனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் ஆனமடுவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து மக்களும் தயாராக வேண்டும்

## -சம்பிக்க ரணவக்க அழைப்பு-



தற்போதைய அரசாங்கம் தொடர்பில் அனைத்து இன மக்களும் வெறுப்படைந்துள்ள நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து மக்களும் தயாராக வேண்டுமென முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை அவர் வந்திருந்த நிலையில் யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்து மேலும் பேசுகையில் நாட்டை தற்போது வழிநடத்தும் அண்ணன் தம்பிக் கூட்டு அரசாங்கத்தினால் மின் தடை காரணமாக முழு நாடே இருளில் மூழ்கியுள்ளது.நமது நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்வாறான பாரிய மின் தடைகள் ஏற்படாதவாறு நம் சிறப்பான திட்டங்களை மக்களுக்கு வழங்கி வந்தோம்.நாடு தற்போது கடன் சுமையில் சிக்கியுள்ள நிலையில் அதனை மீட்டெடுப்பதற்குரிய திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளாது மக்கள் மீது சுமையை சுமத்தி வருகின்றதுடன் ஆட்சியாளர்களால் மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நான் பெருநகர விருத்தி அமைச்சராக மற்றும் மின் சக்தி அமைச்சராக இருந்த கால கட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்காக பல திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினேன். மின் சக்தி அமைச்சராக இருந்த போது தலைமை அலுவலகத்தில் தமிழ் மொழி தெரிந்த தகுதியானவர்களை அதிகம் உள்வாங்கினேன்.

அதேபோல பெருநகர பிரதி அமைச்சராக இருந்தபோது யாழ் மாநகர சபைக்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீட்டை வழங்கினேன். குறிப்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி இணைப்பு நகரத்தை உருவாக்குவதற்கான செயற்திட்டத்தினை தயாரித்தேன். ஆகவே தற்போதைய அரசாங்கம் தொடர்பில் அனைத்து இன மக்களும் வெறுப்படைந்த நிலையில் உள்ளனர். மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து மக்களும் தயாராக வேண்டும் என்றார்.

(75)

# பாகிஸ்தானில் இலங்கையர் தாக்கப்பட்டு கொலை





பாகிஸ்தான், சியல்கோட் நகரிலுள்ள தனியார் தொழிற்சாலையொன்றில் ஏற்றுமதி முகாமையாளராக பணியாற்றிய இலங்கையரொருவர் தொழிற்சாலை ஊழியர்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவரது உடல் தகனம் செய்யப்பட்டுள்ளதாக சியல்கோட் மாவட்ட பொலிஸ் அதிகாரியான உமார் மாலிக் பாகிஸ்தானின் இணையத்தள செய்தி பக்கமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.இந்நிலையில் சியல்கோட் உள்ளிட்ட பாகிஸ்தானின் பன்ஜாப் மாநிலத்தின் பிரதான அமைச்சர் ஹஸ்மான் புஸ்தார் இது மிகவும் துயரகரமான சம்பவமென தெரிவித்துள்ளார்அத்துடன் இந்தச் சம்பவத்தில் சட்டத்தை கையில் எடுத்த நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பன்ஜாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இலங்கையர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமைக்கான காரணம் இதுவரையில் வெளியிடப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### நாளை கீரிமலையில் இரத்ததான முகாம்

கீரிமலை-கருகம்பனை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரத்ததான முகாமொன்று இடம்பெறவுள்ளது.

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடாத்தும் இந்த இரத்ததான முகாம் காலை-08.30 மணி முதல் பிற்பகல்- 03.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இரத்ததான முகாமில் இரத்ததானம் வழங்க விரும்புபவர்கள் 0761900164, 0773241755 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்தள்ளனர்.

# ஊடகவியலாளர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டமை கண்டனத்துக்குறியது

## -சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா-

பொலிஸ் உத்தியோகத்தரொருவரால் ஊடகவியலாளர் ஜெ. சுலக்சன் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியதென தமிழ்த் தேசியக் கட்சி யின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கடந்த 2ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் ஊடகவியலாளர் ஜெ. சுலக்சன் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளார். இது கண்டனத்துக்குரியது என்பதுடன் மனித உரிமையை மீறும் செயலாகும் இச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை பாரபட்சம் இன்றி, முழுமையானதாகவும் விரைவானதாகவும் இடம்பெற்று நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இந்நிலையில்யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இச் சம்பவம் தொடர்பில் குரல் எழுப்புவதன் ஊடாக தமது கடமையை செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கிந்திய தீவுகள் அணியை வயிட் வோஷ் செய்தது இலங்கை



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 164 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில், இலங்கை அணி முழுமையாக கைப்பற்றியுள்ளது.

காலி மைதானத்தில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பெத்தும் நிஸங்க 73 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், பெர்மால் 5 விக்கெட்டுகளையும் வோரிக்கான் 4 விக்கெட்டுகளையும் ரோஸ்டன் சேஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 253 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 72 ஓட்டங்களையும் பிளக்வுட் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ரமேஸ் மெண்டிஸ் 6 விக்கெட்டுகளையும் எம்புல் தெனிய மற்றும் ஜெய விக்கிரம ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 49 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 345 ஓட்டங்களை பெற்றிருந்தபோது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு, இலங்கை அணி 297 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 155 ஓட்டங்களையும் பெத்தும் நிஸங்க 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், பெர்மால் 3 விக்கெட்டுகளையும் ரொஸ்டன் சேஸ் 2 விக்கெட்டுகளையும் ஹோல்டர் மற்றும் பிரத்வெயிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து ஒருநாள் மீதமிருக்க 297 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 132 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 72 ஓட்டங்களையும் பிளக்வுட் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய மற்றும் ரமேஸ் மெண்டிஸ் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்சய டி சில்வாவும் தொடரின் நாயகனாக பெத்தும் நிஸங்கவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

குறிப்பாக இந்த தொடருடன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் விடைபெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### -வான்கடே டெஸ்டில் டக்அவுட்-

# மோசமான சாதனை பட்டியலில் இணைந்தார் கப்டன் கோலி



நியூசிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் இந்திய அணி கப்டன் விராட் கோலி, 4 பந்துகளை சந்தித்த நிலையில் ஓட்டமேதும் எதும் எடுக்காமல் வெளியேறினார்.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி கப்டன் விராட் கோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இப் போட்டியில் 3 ஆவது விக்கெட்டுக்கு கப்டன் விராட் கோலி களம் இறங்கினார். இதே ஓவரின் கடைசி பந்தில் விராட் கோலி எல்.பி.டபிள்யூ ஆகி டக்வுட் ஆனார். இவர் 4 பந்துகளில் ஓட்டங்கள் அடிக்கவில்லை. இந்த இரண்டு விக்கெட்டுகளையும் அஜாஸ் பட்டேல் வீழ்த்தினார்.

இந்த டக்அவுட் மூலம் விராட் கோலி மோசமான சாதனைகளில் தனது பெயரை இணைத்துள்ளார்.

இது டெஸ்ட் கப்டனாக விராட் கோலியின் 10 ஆவது டக்அவுட் இதுவாகும். இதன்மூலம் கப்டனாக அதிகமுறை டக்அவுட் ஆகிய வரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ளார்.

நியூசிலாந்து அணியின் ஸ்டீபன் பிளமிங் 13 முறை டக்அவுட் ஆகியுள்ளார். தென் ஆபிரிக்காவின் கிரேம் ஸ்மித் 10 முறை டக்அவுட் ஆகியுள்ளார். தற்போது இவருடன் விராட் கோலி இணைந்துள்ளார். எம்.எஸ். டோனி, ஆதர்டன், குரோஞ்ச் ஆகியோர் தலா 8 முறை டக்அவுட் ஆகி கடைசி இடத்தில் உள்ளனர். விராட் கோலி இந்திய கப்டனாக ஒரு வருடத்தில் இதன்மூலம் நான்கு முறை டக்அவுட் ஆகியுள்ளார். இதன்மூலம் ஒரே வருடத்தில் அதிகமுறை டக்அவுட் ஆகிய இந்திய கப்டன்கள் என்ற மோசமான சாதனையில் பிஷன் பெடி (1976), கபில் தேவ் (1983), எம்.எஸ். டோனியுடன் (2011) இணைந்துள்ளார்.

### -சர்ச்சைகளில் சிக்கிவரும்-

# ஆஸி., இங்கிலாந்து வீரர்கள் அனல் பறக்குமா ஆஷஸ் தொடர்?



வரும் ஆஷஸ் தொடரில் நாதன் லயன் சரியாக விளையாடவில்லை எனில் அதுவே அவருக்கு கடைசித் தொடராக இருக்கும் என்று இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் லக்ஷ்மண் சிவராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகப் பிரபலமானது. இந்த ஆண்டின் ஆஷஸ் தொடர் வரும் 8 ஆம் திகதி தொடங்குகிறது. ஆக்ரோஷம், விறுவிறுப்பு, சர்ச்சைகளுக்கு துளியும் பஞ்சமில்லாத டெஸ்ட் தொடராக ஆஷஸ் டெஸ்ட் பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய வீரர் டிம் பைன் களத்துக்கு வெளியே தகாத முறையில் நடந்து கொண்டதற்காக டெஸ்ட் கப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். தற்போது, பவுலரான பேட் கம்மின்ஸ் டெஸ்ட் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அவஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றிலேயே ஒரு பவுலரை கப்டனாக நியமனம் செய்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

அதேபோல், இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களும் அடிக்கடி நிறவெறி மற்றும் மதம் சார்ந்த சர்ச்சைகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். இரு அணிகளும் கடுமையான சர்ச்சைகளுடன் களமிறங்குவதால், 2021-2022 ஆஷஸ் தொடர் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே ஆஷஸ் டெஸ்ட் தொடர் குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான லஷ்மன் சிவராமகிருஷ்ணன் கூறுகையில்,

இரு அணிகள் தரப்பிலும் தவறுகளும், சர்ச்சைகளும் இருக்கின்றன. ஆனாலும், இவையெல்லாவற்றையும் புறந்தள்ளுங்கள். டிசம்பர் 8 ஆம் திகதி போட்டியின் விறுவிறுப்புக்காக காத்திருப்போம். என்னைப் பொறுத்தவரை அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் ஃபார்மில் இல்லை. வேகப்பந்து வீச்சாளரின் தலைமையின் கீழ் நாதன் லயன் எப்படி செயல்பட போகிறார் என தெரியவில்லை. இந்த தொடரில் அவர் சரியாக விளையாடவில்லை எனில் அதுவே அவருக்கு கடைசி தொடராக இருக்கும் என நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

# வான்கடே டெஸ்டில் சதம் விளாசிய மயங்க் அகர்வால்

### -முதல் நாள் ஆட்ட முடிவில் இந்தியா 221-





புஜாரா, விராட் கோலி, ஷ்ரேயாஸ் அய்யர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், மயங்க் அகர்வால் போட்டியில் சிறப்பாக விளையாடி சதம் விளாசினார்.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் வான்கடே மைதானத்தில் நேற்று தொடங்கியது. மைதானத்தில் பவுண்டரி கோடு அருகே ஈரப்பதம் காணப்பட்டதால் போட்டி 9.30 மணிக்குப் பதில் 11.30 மணிக்கு தொடங்கியது.

இந்திய அணி கப்டன் விராட் கோலி நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். ரகானே, ஜடேஜா, இஷாந்த் சர்மா ஆகியோர் இந்திய அணியில் இடம் பெறவில்லை.

மயங்க் அகர்வால், ப்மான் கில் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ப்மான் கில் 44 ரன்னில் ஆட்டமிழந்து அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த புஜாரா, விராட் கோலி கோலி டக்அவுட்டில் வெளியேறினர். இதனால் இந்திய அணி 90 ரன்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

4 ஆவது விக்கெட்டுக்கு மயங்க் அகர்வால் உடன் ஷ்ரேயாஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார். ஒரு பக்கம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் மயங்க் அகர்வால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 119 பந்தில் அரைசதம் அடித்தார்.

ஷ்ரேயாஸ் அய்யர் 18 ஓட்டத்தில் வெளியேறினார். இருந்தாலும் இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் சேர்த்தது. 5 ஆவது விக்கெட்டுக்கு மயங்க் அகர்வால் உடன் சகா ஜோடி சேர்ந்தார்.

மயங்க் அகர்வால் சிறப்பாக விளையாடி அரைசதத்தை சதமாக மாற்றினார். அவர் 196 பந்தில் 13 பவுண்டரி, 3 சிக்சருடன் சதம் அடித்தார். முதல் டெஸ்டில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், இந்திய அணியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என விமர்சனம் எழுந்தது. இந்த நிலையில் சதம் விளாசி விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். இதற்கிடையே இந்தியா முதல்நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்கள் அடித்துள்ளது.

மயங்க் அகர்வால் 120 ஓட்டங்களுடனும், சகா 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நியூசிலாந்து அணியில் அஜாஸ் பட்டேல் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

A/L 2021
தமிழ் கருத்தரங்கு
வடமாகாணத்தில் A தரச்சித்திகளை அதிகம் பெற்றுத்தந்த ஆசிரியர் பா.பத்மநாதன்
B.A (Hons) Tamil 1st Class
M.A (Tamil) 1st Class,
M.E.d (Hons) 1st Class, Dip in Ed.
கருத்தரங்கு 8 நாட்கள் நடைபெறும்
ஆரம்பம்
*வெளி மாணவர்களும் கலந்துகொள்ளலாம்
C.C.A சுன்னாகம் } 06.12.2021 மாலை 3 மணி
மொடேண் சண்டிலிப்பாய் } 08.12.2021 மாலை 3 மணி

### -உலக டூர் பைனலஸ்-

# அரையிறுதிக்கு போட்டிக்கு முன்னேறினார் பி.வி.சிந்து



உலக டூர் இறுதி சுற்று பட்மிண்டன் போட்டி இந்தோனேஷியாவில் உள்ள பாலி நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் உலக சம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, தனது முதலாவது லீக் ஆட்டத்தில் டென்மார்க்கின் லின் கிறிஸ்டோபர்சென்னுடன் மோதினார். 38 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சிந்து 21-14, 21-16 என்ற நேர்செட்டில் கிறிஸ்டோபர்சென்னை வீழ்த்தி வெற்றியுடன் போட்டியை தொடங்கினார்.

இதனையடுத்து, அடுத்த லீக் ஆட்டத்தில் யோனி லியை (ஜெர்மனி) எதிர்கொண்டார் சிந்து. இந்த போட்டியில், 21-10, 21-13 என்ற செட் கணக்கில் லியை வீழ்த்தினார். 31 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் வெற்றி பெற்ற சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இதேபோல் மற்றொரு வீரர் லக்சயா சென்னும் அரையிறுதியை உறுதி செய்தார். ஸ்ரீகாந்த் மற்றும் மகளிர் இரட்டையர் ஜோடியான அஷ்வினி பொன்னப்பா - சிக்கி ரெட்டி ஜோடி தோல்வியடைந்தது. இதேபோல் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகியுள்ளனர்.

# கபில்தேவை நெருங்கும் அஸ்வின் நியூசி. ஆல்-ரவுண்டர் புகழாரம்

இந்தியாவின் சிறந்த ஆல் ரவுண்டர்கள் பலர் இருந்தபோதும் தன் மனதுக்கு சட்டென நினைவுக்கு வருவது அஸ்வின் தான் என மெக் மில்லன் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைசிறந்த ஆல் ரவுண்டர் எப்போதும் கபில் தேவ் தான். இருப்பினும், தற்போது அஷ்வின் மிகச்சிறந்த ஆல் ரவுண்டராக திகழ்வதாக நியூசிலாந்தின் ஆல் ரவுண்டர் மெக் மில்லன் புகழாரம் சூட்டியுள்ளார்.

சமீப காலமாக இந்திய சுழற்பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் பந்துவீச்சில் மட்டுமல்லாமல், துடுப்பாட்டத்திலும் அசத்தி வருகிறார். 80 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அஸ்வின் அதிக விக்கெட் எடுத்த இந்திய வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளார். இது தவிர 2755 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதில் 5 சதங்கள் அடங்கும். தற்போது நடைபெற்று வரும் நியூசிலாந்து டெஸ்ட் தொடரில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் அஷ்வின் அசத்தி வருகிறார்.

குறிப்பாக, நியூசிலாந்துக்கு எதிரான கான்பூர் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் மிக முக்கியமான கட்டத்தில் அஸ்வினும், ஷ்ரேயாஸ் அய்யரும் இணைந்து இந்திய அணியை சரிவில் இருந்து மீட்டு அபாரமாக விளையாடினர். அந்தப் போட்டியில் அஸ்வின் 32 ஓட்டங்களை குவித்தார்.

இந்நிலையில் நியூசிலாந்து அணியின் முன்னாள் ஆல் ரவுண்டர் கிரேக் மெக் மில்லன், அஸ்வினின் ஆட்டம் குறித்து புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியாவைப் பொருத்தவரை சிறந்த ஆல் ரவுண்டராக எப்போதும் கபில்தேவ் திகழ்கிறார். அந்த இடத்தை நெருங்குவதற்கு அஸ்வினுக்கு வெகுதூரம் இல்லை. இந்தியாவின் சிறந்த ஆல் ரவுண்டராக அஜித் அகர்கர், இர்ஃபான் பதான், ஹர்திக் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா இருந்தாலும், என் மனதுக்கு சட்டென நினைவுக்கு வருவது அஸ்வின்தான். அவருக்குப் போதுமான அங்கீகாரம் கிடைப்பதில்லை என நினைக்கிறேன். இவ்வாறு மெக் மில்லன் கூறினார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணங்கள் களையப்படாது முன்வைக்கப்படும் எந்தவொரு பட்ஜெட்டும் தோல்வியையே தரும்

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணங்கள் களையப்படாது முன்வைக்கப்படும் எந்த வரவு செலவுத்திட்டமும் தோல்விக்கான வரவு செலவுத் திட்டமாகும் என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டுகின்றது.இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பொருளாதார பிரச்சினைகளும் பொருளாதார காரணிகளால் உருவாகவில்லை. மாறாக சமூக மற்றும் அரசியல் காரணிகளால் உருவானவை என தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம், இலங்கை கட்டியெழுப்பப்பட வேண்டுமாகவிருந்தால் எல்லா மக்களையும் இணைத்து இலங்கைத் தேசியத்தை கட்டியெழுப்பும் ஒரு கட்சி ஆட்சிக்கான அரசியல் தலைமைத்துவம் அவசியமாகும். இவைகள் அடையப்பட்டால் இலங்கை கொண்டிருக்கும் வளங்களுடன் இலங்கைப் பொருளாதாரம் நெருக்கடியில் இருந்து மீள முடியும் எனவும் தெரிவித்தார்.**

**வரவு செலவுத்திட்டம் எதை இலக்காக கொண்டுள்ளது?**

மொத்தமாக இவ்வரவு செலவுத்திட்டத்தின் நோக்கம் கிராமியத்துறையையும் இயற்கை விவசாயத்தையும் அபிவிருத்தி செய்து இயற்கை பாதுகாப்பதுடன் ஆரோக்கியமான இலங்கையை கட்டியெழுப்புவதாக இருக்கின்றது.பொருளாதார அபிவிருத்தியில் இயற்கைக்கு தீங்கு விளைகின்றது என்பது எமக்கு புதியவை அல்ல. இயற்கையை பாதுகாத்தல் என்பது ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தியில் எந்த வருமான மட்டத்தில் செய்யப்பட வேண்டும் என்பதற்கு குஸ்நெற்றின் சூழல் வளையி எமக்கு கற்றுத்தருகின்றது. இதன் பிரகாரம் உலக நாடுகள் ஒரு குறிப்பிட்ட உயர்ந்த வருமான மட்டத்தை அடைந்ததன் பின்னர்தான் சூழல் பாதுகாப்புக்கு அதிக வளங்களை ஒதுக்கீடு செய்கின்றன. இவை தலாவருமான அடிப்படையில் நாடுகளுக்கு நாடு வேறுபட்ட போதும் USA $ 20000 மேல் வருமான மட்டத்தை அடைந்த பின்னர் தான் சூழல் பாதுகாப்பு கொள்கை வகுப்பில் முக்கிய இடத்தை பெறுகின்றன. இவ்வாறு உயர்ந்த வருமான மட்டத்தில் உள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட இந்த கொள்கையில் எவ்வளவுக்கு அக்கறை செலுத்தி சூழலை பாதுகாக்கின்றன என்பது தொடர்பாக நிறைய வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. வளர்ந்த நாடுகள் சேதன விவசாயத்தை வலியுறுத்திய போதும் அசேதன விவசாயத்தில் முழுமையாக ஈடுபடுகின்றன. வளர்ந்த நாடுகள் கூட இவ்விடயத்தில் ஒரு உறுதியான கொள்கைக்கு வரமுடியாமல் இருக்கும் போது 3840 டொலர் தலாவருமானத்தை கொண்ட இலங்கை ஏன் இவ்விசப்பரீட்சையில் இறங்கியுள்ளது என்பதும் 2022 வரவு செலவுத்திட்டம் ஏன் இதை நோக்கி செய்யப்பட்டுள்ளது என்பதும் கேள்வி எழுகின்றது. விடை பொருளாதார அபிவிருத்தியல்ல. மாறாக கடந்த கால கொள்கைகள் போன்று பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் அரசின் இனவாத அரசியல் ஆகும்.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகள் கடந்த காலத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் இனவாதமாக செயற்பட்டு இந்த நாட்டின் அபிவிருத்தியை குட்டிச்சுவராக்கி பொருளாதாரத்தை அழித்துள்ளன.

**மக்கள் மீது எவ்வாறான தாக்கங்களைக் கொண்டுள்ளது?**

முதலாவது, இலங்கை அரிசி மற்றும் மீன் உற்பத்திக்கான சாதகமான பல காரணிகளைக் கொண்டிருந்தும் அரிசியில் நாம் இது வரை முழுமையான தன்னிறைவை அடையவில்லை. இலங்கையின் அரிசி தேவையில் சராசரியாக 95 வீதத்தை மட்டுமே இலங்கை உள்நாட்டில் உற்பத்தி செய்கின்றது. ஏன்? நீர் இல்லையா? நிலம் இல்லையா? வண்டல் மண் இல்லையா? நீர்தேக்கங்கள் அணைக்கட்டுக்கள் அமைப்பதற்கு நிதி இல்லையா? அன்னிய உதவி இல்லையா? பொருளாதார கொள்கை சுயநிறைவுக்கு பொருத்தமற்றதா? தொழில் நுட்பம் இல்லையா? எல்லாமே இருந்தன. ஆனால் தன்னிறைவு அடையவில்லை ஏன்? விவசாய அபிவிருத்தி என்பது உண்மையாக விவசாயத்தை சார்ந்த மக்களின் வருமானத்தை உயர்த்துவதாக அமையவில்லை.

**விவசாயிகள் மீதான தாக்கங்கள்.**

இங்கிலாந்தில் நிலவடைப்புக் சட்டங்கள் சிறிய நிலங்களை பெரிய நிலங்களுடன் இணைத்து அடைக்கப்பட்டு தொழில்நுட்பங்களை புகுத்தி விவசாய புரட்சி ஏற்பட்டு சுயநிறைவு மட்டும் அல்ல விவசாய ஏற்றுமதி அதிகரிப்புக்கு உதவியது. ஆனால் இலங்கையில் பெரிதாக தொழில்நுட்பங்களை பயன்படுத்தக் கூடிய அரச நிலங்கள் பலவற்றில் உலர்வலய குடியேற்றங்களை தாபித்து சிங்கள் பெரும்பான்மை மக்களின் இனவிகிதாசாரத்தை வடக்கு கிழக்கில் உள்ள உலர் வலயங்களில் அதிகரிப்பதற்கு பிரித்து சிறிய நிலத்துண்டுக்கள் ஆக்கப்பட்டன. இது நாட்டின் விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு தடையாக இருந்தது. சர்வதேச நாடுகளின் விவசாயத்திட்டங்களின் பல அன்னிய உதவிகள் உங்களுடைய இனவாதத்தை நிலைநிறுத்தும் விவசாய அபிவிருத்திக்காக பலிக்கடா ஆக்கப்பட்டது. இதன் விளைவு இன்றும் அரிசிக்கு பிறநாடுகளில் கையேந்தி நிற்கிறோம்;. தற்போது 2022 வரவுசெலவு திட்டம் 80 வீதமான மக்கள் சார்ந்து வாழ்கின்ற விவசாயத்துறை மற்றும் கிராமியத்துறையில் இயற்கை விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது. உங்களுடைய இனவாத விவசாய அபிவிருத்திக் கொள்கை தோல்வியடைந்த பின்னர் இன்னொரு இனவாத இயற்கை விவசாயக்கொள்கையை கையில் எடுக்கிறீர்கள். மக்கள் நஞ்சற்ற இயற்கை விவசாயத்துக்கு எதிரானவன் அல்ல. ஆனால் இனவாத அடிப்படையில் புத்தமதம் மற்றும் பௌத்ததுறவிகளின் ஆதரவைப் பெறுவதற்காக காலத்துக்கு பொருத்தமற்ற விதத்தில் கொவிட் 19 இனால் நாடு அழிவடைந்து செல்கின்ற போது இதை மென்மேலும் தீவிரமாக இந்த வரவுசெலவுத்திட்டத்தில் கொண்டுவருவது மக்கள் மீது கடுமையாக விளைவுகளை உருவாக்கும். அரசியல்வாதிகளின் 70 ஆண்டுகளுக்கு மேலாக இனவாத விவசாயக் கொள்கையினால் எமது நாடு விவசாயத்தில் தோல்வியடைந்தது என்பதை அவர்கள்; இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே இந்த இனவாத இயற்கை விவசாயக் கொள்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. விளைவை பொறுத்து இருந்து பாருங்கள். தற்போது மரக்கறி ரூபா 500 ஆகிவிட்டது. இது 1000 க்கு சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**அரச வீண்விரையமான செலவினங்கள்.**

அரசின் நலன்புரி செலவுகள் இனவாதம் கொண்டவையாக தமிழ்மக்கள் கொண்டிருந்த பதவிகளில் சிங்கள மக்களை அமர்த்துவதற்கு கல்வியில் தரப்படுத்தல் வள ஒதுக்கீட்டில் இன மற்றும் பிரதேச ரீதியான வேறுபாடுகள் என இனவாத அரசியல் செய்தார்கள். இவர்களுடைய இந்த இனவாத அரசியல் கல்விக் கொள்கையால் நாட்டின் மனித வளம் பொருளாதார அபிவிருத்திக்கு பயன் அற்றதாக இருக்கின்றது. இலவசக் கல்வி, இலவச நலன்புரிச்செலவுகள் நாட்டின் உற்பத்தி பெருக்கத்துக்கு பங்களிப்பு செய்யவில்லை. நாடு செல்வத்தை உருவாக்குவதற்கு முன்னர் பகிர்வுக்கு சென்று நாட்டை அழித்துள்ளார்கள். இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இல்லாத சமூக அபிவிருத்தி குதிரை வண்டியை இழுப்பதற்கு மாறாக வட்டி குதிரையை இழுப்பதற்கு ஒத்தது. இலங்கை மரத்தை நாட்டுவதற்கு முன்னர் அதன் கனியை ருசிபார்க்கின்றது. எட்டு இலட்சம் அரச பணியாளர்களுக்கு 16 இலட்சத்தை பணிக்கு வைத்திருக்கின்றது. அரச நிர்வாகத்தில் டெஜிறல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருடம் வருடம் வெளியேறுகின்ற பட்டதாரிகளை தேவைக்கு மீறி பொதுத்துறைக்குள் உள்ளீர்க்கின்றீர்கள். இந்த தொழில்நுட்பத்தின் பெறுபேற்றை பொருளாதாரம் எப்படி அனுபவிக்க முடியும்? இலங்கையின் கல்விக்கொள்கையால் வெளியேறுகின்ற பட்டதாரிகளுக்கு பொதுத்துறை நிறுவனங்களை முகாமைத்துவப்படுத்த முடியவில்லை. தமிழ் மக்கள் உயர் அதிகாரிகளாக இருந்த போது பல அரச தொழில் முயற்ச்சிகள் இலாபத்தில் இயங்கி அரசுக்கு நிறைய வருமானங்களை பெற்றுக்கொடுத்தன. இன்று அரசின் இனவாதக் கல்விக் கொள்கையினால் உருவான பட்டதாரிகளைக் உயர் அதிகாரிகளாக கொண்ட அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. இனத்துக்கு முக்கியம் கொடுக்காமல் திறமைக்கு முக்கியம் கொடுத்து உயர்பதவிகளில் திறமையானவர்களை அமர்த்தி இருந்தால் இந்நிறுவனங்கள் அரசுக்கு இலாபத்தை உழைக்கும்.

உரையில் சிங்கப்பூர் பற்றி வெட்கம் இல்லாமல் புள்ளிவிபரங்களில் குறிப்பிடுகிறீர்கள். ஆகர் (Meritocracy, fragmatism and Honesty) ஆகிய மூன்றும் சிங்கப்பூரின் வெற்றிக்கு காரணம். இவை மூன்றும் பற்றி இவ்வரவு செலவுத்திட்டம் எதுவும் குறிப்பிடவில்லை. இனஒற்றுமைக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் சிங்கப்பூரில் இருந்து என்ன அனுபவங்களை கற்க வேண்டும் என்பதை ஏற்க மறுக்கின்றது. சிங்கப்பூரை விட அதி உன்னதமான இயற்கை வளங்களைக் கொண்ட இலங்கையானது இனவாத அரசியல் கொள்கையினால் பொருளாதாரத்தில் தோல்வி கண்டுள்ளது. 2022 வரவு செலவுத்திட்டம் இத்தோல்வியின் வெளிப்பாடு ஆகும்.



**சிறுமுயற்சியாளர்கள் மீது வரவு செலவுத்திட்டத்தின்; தாக்கம்.**

சிறிய முயற்சியாளர்களோ பெரிய முயற்சியாளர்களோ அவர்கள் வர்த்தகம் செய்வதற்குரிய சூழலை வரவு செலவுத்திட்டம் வழங்கத் தவறிவிட்டது. விலைவீக்கம் கட்டுப்படுத்தப்படும் போதுதான் கூலி வீழ்ச்சியடையும். கூலி குறைப்பு சிறு முயற்சிகளில் இலாபத்தை அதிகரிக்கும். விலை உயர்வைக் கட்டுப்படுத்தாமல் இதை அடைய முடியாது. நிதி நிறுவனங்கள் மீது 3 வீத வரி அதிகரிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் அந்த வரியை சிறுமுயற்சியாளர்கள் மீது நிதி நிறுவனங்கள் திணிக்க மாட்டாது என்பதற்க்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. உதாரணமாக வங்கிகளின் வைப்பு மற்றும் கடனுக்காக வட்டி வீதங்களுக்கு இடையில் உள்ள வேறுபாடு உயர்வாக உள்ளது. (ஏறத்தாழ 5 வீதம்) ஒரு முதலுக்கு சொந்தக்காரனான வைப்பாளர் பெற்றுக்கொள்ளுகின்ற வட்டி வருமானத்துக்கு ஏறத்தாழ சமமாக வங்கிகள் வட்டி வருமானத்தை பெறுகின்றன. இந்த இடைவெளி வெளிநாடுகளில் ஒரு வீதமாகும். இந்நிலையில் வைபாளனுக்கும் மற்றும் கடன்பெறுபவனுக்கும் நன்மை கிடைக்காமல் நிதிநிறுவனங்கள் அதிக நன்மைகளை பெறுகின்றன. பல சிறுமுயற்ச்சிகள் வெளிநாட்டு இறக்குமதி உள்ளீடுகளில் தங்கியிருக்கின்றன. வரவு செலவுத்திட்டம் இப்பிரச்சினைக்கு தீர்வு கொடுக்கவில்லை.

**கொரேனா சூழ்நிலையில்..**

*** பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நீங்கள் கூறும் அறிவுரைகள்.**

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணங்கள் களையப்படாது முன்வைக்கப்படும் எந்த வரவு செலவுத்திட்டமும் தோல்விக்கான வரவு செலவுத்திட்டமாகும் என்பதை வரலாறு நிருபித்துக் காட்டுகின்றது.இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பொருளாதார பிரச்சினைகளும் பொருளாதார காரணிகளால் உருவாகவில்லை. மாறாக சமூக மற்றும் அரசியல் காரணிகளால் உருவானவை ஆகும். எனவே நாட்டில் சுதந்திரத்தில் இருந்து புரையோடி இருக்கின்ற இனமுரண்பாட்டுக்கான காரணிகள் தீர்க்கப்பட வேண்டும். இன ஒற்றுமையை உருவாக்குவதற்கு பொருத்தமாக அரசியல் யாப்பு சீர்திருத்தம் உருவாக்கப்பட வேண்டும். சீர்திருத்த யாப்புக்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். நாட்டில் பல தேசியங்களை தவிர்த்து இலங்கைத் தேசியம் நிரந்தர அமைதியில் கொண்டு வரப்படவேண்டும். சட்டம், ஒழுங்கு, சமூக நீதி பேணப்பட வேண்டும். குடும்ப அரசியல் முற்றாக அகற்றப்பட வேண்டும். நல்லாட்சி உருவாக்கப்பட வேண்டும். அரசியலில் இருந்து மதம் பிரிக்கப்பட வேண்டும். இவைகளை அடைவதற்கு பல கட்சி ஆட்சி முறையை தவிர்த்து எல்லா மக்களையும் இணைத்து இலங்கைத் தேசியத்தை கட்டியெழுப்பும் ஒரு கட்சி ஆட்சிக்கான அரசியல் தலைமைத்துவம் அவசியமாகும். இவைகள் அடையப்பட்டால் இலங்கை கொண்டிருக்கும் வளங்களுடன் இலங்கைப் பொருளாதாரம் நெருக்கடியில் இருந்து மீள முடியும்.

ரொஷான் நாகலிங்கம்

---

# தமிழ் மக்களின் தலைவர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே வெகுஜன எழுச்சியை நடத்த முன்வர வேண்டும்

**இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் ஜனநாயகத்துக்கு நேர் விரோதமான செயற்பாடுகளிலும் இனவாதத்தை முன்னிறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில்,பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்குள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மட்டுப்படுத்தாது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பாக வெகுஜன எழுச்சியை பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்த முன்வர வேண்டும். தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் தொடர்ந்தும் உறவைப் பேண தயாராக வேண்டும். இதன் மூலமே இந்திய உபகண்டத்தில் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் நியாய பாடுகளை மேல் நிலைக்குக் கொண்டுவர முடியும் என நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். ஞாயிறு தினக்குரலுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கேள்வி - அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் டிசம்பர் 9ம், 10ம் திகதிகளில் நடத்தவிருக்கும் ஜனநாயகத்துக்கான ஒன்றுகூடலில் 110 நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில்,இலங்கைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.இது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு?**

பதில் - ஜோ பைடனின் வருகை அமெரிக்க தேசத்தில் கறுப்பின மக்கள், உழைக்கும் மக்கள், பெண்கள் , இனவாதத்துக்கு எதிரான பிரிவினர் மற்றும் இனவாதத்தை எதிர்க்கும் ஐரோப்பிய மக்கள் எழுச்சியுடன் இணைந்ததாகும். புதிய அமெரிக்க ஜனாதிபதி உலகம் முழுவதும் ஜனநாயகம் வலிமை பெற வேண்டும் என்பதுடன் மனித உரிமைகள் உரியமுறையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார். இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் ஜனநாயகத்துக்கு நேர் விரோதமான செயற்பாடுகளிலும் இனவாதத்தை முன்னிறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணிக்கு இனவாதத்திற்கு தூணாக இருக்கும் கலகொட ஞானசார தேரரை நியமித்தமை ,உலகக் கிண்ண இருபதுக்கு-20 போட்டியில் நிறவெறிக்கு எதிரான வீரர்களின் உறுதிமொழி எடுக்கும் செயற்பாட்டில் கலந்துகொண்ட அணிகளில் இலங்கை மட்டுமே நிராகரித்திருந்தது. இனவாத ரீதியான செயற்பாடுகளில் இருந்து இன்றைய ஆட்சியாளர் கடுகளவும் விலக விருப்பம் இல்லாதவர்களாக உள்ளனர். புதிய ஆட்சியாளரால் கொண்டுவரப்பட்ட 20வது திருத்தம் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கும் செயற்பாடாகும். இவை யாவற்றையும் உன்னிப்பாக அவதானித்தே இலங்கையை புறக்கணித்திருக்கிறார்கள்.



**கேள்வி - தமிழ் தேசிய கூட்டமைப்பினரை அமெரிக்கா அமைதி மற்றும் சமாதான செயற்பாடுகளுக்காக ஒன்றிணைந்து செயற்பட அழைத்திருப்பது தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

பதில் - இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்க புதிய ஆட்சியாளர் எத்தகைய தயாரும் இல்லாத நிலை தொடர்கிறது. மேலும் ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்கியாள வேண்டும் என்ற நோக்கத்திலேயே இலங்கை ஆட்சியாளர்களின் சகல செயற்பாடுகளும் முதன்மை பெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை மூலம் மற்றும் வேறு வழிகளிலும் இலங்கைக்கு வழங்கப்பட்ட அனைத்து அழுத்தங்களும் விழலுக்கிறைத்த நீர் ஆகவே அமைந்துள்ளது. இதன் காரணமாகவே அமெரிக்கா தமிழ் தரப்பை முதன்மைப்படுத்தி புதிய அரசியல் நகர்வொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

**கேள்வி - 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணம் எதுவும் இல்லாத நிலை காணப்படுகிறது. தென்னிலங்கை மக்களின் உணர்வலைகள் தற்போது எப்படி இருக்கிறது ?**

பதில் - யுத்த வெற்றி கதாநாயகர்களாக அதிக மதிப்பைப் பெற்ற இந்த ஆட்சியாளர்கள் செல்லும் இடங்கள் எல்லாம் மக்களின் அதிக வரவேற்பை பெற்றிருந்தனர். ஆனால் இன்று இவர்களின் உருவ பொம்மைகளை நடுத்தெருவில் வைத்து அடித்து, உதைத்து தண்டனை வழங்கப்படும் நிலை காணப்படுகிறது. உழைக்கும் மக்கள், விவசாயிகள் என அனைத்து பிரிவினரும் வீதியில் நின்று போராடி வருகின்றனர். வளங்களை விற்றல், ஊழல் , அரச அதிகாரிகளை கண்டித்தல் என அனைத்தையும் செய்து வருகின்றனர். ஆட்சியை மாற்ற மக்கள் தயாராகவே உள்ளனர். ஆனால் எதிரணி அரசியல் சக்திகள் பிளவுண்ட நிலையில் ஆட்சியாளர் மீளப் பலம்பெற சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றனர். விசித்திரமான கொள்கைகளை கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்கும் இவர்கள் மக்களின் நலனுக்காக ஒன்றிணையாமல் இருப்பது கவலைதரும் நிலையாகும்.

**கேள்வி - ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து நாட்டில் ஜனநாயகத்தை மேற்கொண்டுவரும் உங்கள் அரசியல் பயணத்தில் இன்றைய நிலை என்னவாக உள்ளது.?**

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைய வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் எமக்கு இல்லை. உண்மையில் நாட்டில் பாசிச தன்மை கொண்ட இனவாத சக்திகள் மேல் வந்தபோது இந்த நாட்டின் பாரம்பரிய இடதுசாரிகள் இனவாதத்திற்கு ஆதரவளித்து அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டனர். இலங்கையின் தாராளவாத சக்திகளில் ஒரு பிரிவினர் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் இனவாதத்திற்கு எதிராகவும் தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கவும் இணைந்த ஒரு அரசியல் பயணத்துக்கு தயாராக இருந்தனர். எனவே தாராளவாத சக்திகளுடன் இணைந்து பயணிக்க நாம் தயாரானோம். இன்றும் கூட தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கும் நிலைப்பாட்டுடன் தாராளவாத சக்திகள் முன்வந்தால் அவர்களுடன் இணைந்து செயல்பட நாம் தயாராகவே உள்ளோம்.

**கேள்வி - அரசாங்கத்தின் ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணியும் புதிய அரசியல் யாப்பு வரைவு ஆகியவை என்ன நிலையில் உள்ளன?**

பதில் - அரசாங்கம் எந்த நேரத்திலும் வீட்டுக்குப் போகலாம். எதிரணியினரின் செயற்பாடு காரணமாக இந்த நிலை எழவில்லை. ஆளும் தரப்புக்குள்ளேயே முரண்பாடுகள், மோதல்கள் உச்ச நிலையில் உள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான மோதல் வெளிப்படையாகவே வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மக்களின் எதிர்ப்பு ,சர்வதேச ரீதியான புறக்கணிப்பு , பொருளாதார வீழ்ச்சி இவற்றில் இருந்து மீள முடியாத இவர்கள் எப்படி ஒரு புதிய அரசியல் யாப்பை நோக்கி பயணிக்க முடியும்.

**கேள்வி - தமிழ் தலைமைகளின் சமகால செயற்பாடுகளை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில் - பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்குள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மட்டுப்படுத்தாது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பாக வெகுஜன எழுச்சியை பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்த முன்வர வேண்டும். தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் தொடர்ந்தும் உறவைப் பேண தயாராக வேண்டும். இதன் மூலமே இந்தியா உபகண்டத்தில் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் ஞாய பாடுகளை மேல் நிலைக்குக் கொண்டுவர முடியும்.

### சமையலறையின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத அரசு

# எவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும்- விஜித ஹேரத் கேள்வி

சமையலறையின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத அரசாங்கத்தால், தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்ய முடியும் என கேள்வி எழுப்பிய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களில், 9.5 கிலோ கிராம் நிறை கொண்ட எரிவாயுவை நிரப்பியமையே, எரிவாயு வெடிப்புகளுக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களில், 9.5 கிலோ கிராம் நிறை கொண்ட எரிவாயு நிரப்பட்டுள்ளதோடு, எரிவாயு கலவைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டமையே நாடு முழுவதிலும் ஏற்படும் வெடிப்புகளுக்குக் காரணம் என்றார்.



இதுவொரு ஆபத்தான விடயம், இது தொடர்பில் ஜனாதிபதி விரைந்து செயற்படாது, இரு வாரங்களில் அறிக்கையை பெற்று தீர்வை வழங்குவதாகக் கூறுகிறார். ஆபத்தான இந்த சிலிண்டர்கள் சந்தைகளில் இருந்து மீளப்பெறப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கி அதற்கு விசேட வரிச்சலுகை வழங்குவதற்கான யோசனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எம்.பி.க்கள் எதிராக வாக்களிக்கவில்லை. எனவே அந்த துறைமுக விற்பனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும். அன்று அதற்கு எதிராக ஜே.வி.பி. மாத்திரமே வாக்களித்தது.

இன்று பெரும்பாலான தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படாதபோதும் பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து ஏனைய இடங்களுக்கு குடிநீர் திட்டங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

உரிய வேதனம் கிடைக்காமல், கோதுமை மாவின் விலையதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள, நாட்டுக்கு அதிக அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு குடிநீரையாவது பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றார்.

## இலங்கையில் மீண்டும் அதிகரிக்கும் கொவிட்



நாட்டில் ஒரே நாளில் மேலும் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, நாட்டில் நேற்று இதுவரை 735 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 565,468 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,399 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கொரோனா தொற்றில் இருந்து மேலும் 341 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 541,124 ஆக அதிகரித்துள்ளது.

## சுகாதார விதிகளை பின்பற்றாத 2,363 பேருக்கு பொலிஸார் எச்சரிக்கை

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் 5,584 உந்துருளிகளும், முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வாகனங்களில் பயணிப்பவர்கள் உரியவாறு சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுகின்றார்களா என்பது குறித்து மேற்கொள்ளப்படும் இந்த சோதனை நடவடிக்கையில், 778 போக்குவரத்து அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது 2,842 உந்துருளிகளிலும், 2,742 முச்சக்கர வண்டிகளிலும் பயணித்த, 8,394 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 2,363 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## ஒரே விமானத்தில் அபுதாபி செல்லும் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் ரணில்

இந்துமகா சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அபுதாபி செல்லவுள்ளார்.

இதன் போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் அதே விமானத்தில் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுச்சூழல், பொருளாதாரம், பெருந்தொற்று என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில், இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது குறித்தும் அதனை முன்னிறுத்தி ஒன்றிணைந்து பணியாற்றவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயஷங்கர், சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பால



கிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்தோடு இன்று சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

2016 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இந்து சமுத்திர மாநாட்டின் தலைவராகப் பதவிவகித்த ரணில் விக்ரமசிங்கவிற்கு, இம்முறை நடைபெறவுள்ள 5 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு ஏற்பாட்டுக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த அழைப்பையேற்று அபுதாபி செல்லவுள்ள முன்னாள் பிரதமர் நாளை ஞாயிற்றுக்கிழமை மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

இந்து சமுத்திர மாநாட்டில் நிலைபேறான கடல்சார் வளங்களின் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தினால் சிறிய தீவுகள் மற்றும் கடற்பிராந்திய நாடுகளுக்கு ஏற்படும் தாக்கங்கள், இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தைக் குறைத்தல், நிறைபேறான எதிர்காலத்தை உறுதி செய்யும் நோக்கில் பசுமை உற்பத்தியை ஊக்குவித்தல், கடற்சூழல் மாசடைவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட சுற்றுச்சூழல்சார் விடயங்கள் தொடர்பிலும் கொவிட் - 19 வைரஸ் பரவலின் பின்னரான பொருளாதார மீட்சி, இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் வர்த்தகப்பாதைகளை உருவாக்குவதன் அவசியம், இந்து சமுத்திர சக்திவலு பாதுகாப்பு உள்ளிட்ட பொருளாதார விடயங்கள் தொடர்பிலும் கொவிட் - 19 தொற்றினால் உலகநாடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், சுகாதாரத்துறையில் காணப்படும் குறைபாடுகள், சமூக - பொருளாதார தாக்கங்கள், எதிர்கால சவால்கள் மற்றும் அவற்றுக்கு முகங்கொடுப்பதில் பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து பணியாற்றவேண்டியதன் அவசியம் உள்ளிட்ட பெருந்தொற்றுப்பரவல் குறித்த விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துங்கள்
### -வலியுறுத்தும் தயாசிறி ஜயசேகர-



மட்டுப்படுத்தப்படும் வகையில் பழைய தேர்தல் முறையிலாவது மாகாணசபைத் தேர்தல்களை இம்முறை மட்டும் நடத்துவது பொருத்தமானது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் நேற்று முன்தினம் பரிந்துரைத்தது.

சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற விசேட குழுவில் சாட்சியமளித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நீண்டகாலமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றார்.

அத்துடன் அடுத்த வருட முதலாவது காலாண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 5,500 ஆக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிப்பது பொருத்தமற்றது எனத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதே பொது மக்களின் நிலைப்பாடு என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யும்வரை குறித்த நிறுவனங்களின் அதிகாரம் ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் நிமல் சிறிபால.டி.சில்வா இக்குழு முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்டமா அதிபர் கருதுவதாகவும், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் சபை முதல்வர், அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடத்த வேண்டும் என்பதே குழுவின் பொதுவான கருத்து என்றார்.

தேர்தல் முறை திருத்தப்படும் போது தொகுதி வாரியில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாகவும் விகிதாசார முறையின் கீழ் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 சதவீதமாகவும் காணப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.

## நுவரெலியாவிலும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளது

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று நுவரெலியாவிலும் பதிவாகியுள்ளது.

நுவரெலியா - பட்டிப்பொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மதியம் எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குடியிருப்பாளர்கள் எரிவாயு அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்தபோது, திடீரெனச் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் பட்டிப்பொல பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அனுமதிக்கப்படாத எரிபொருட்கள்: பயன்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை

அனுமதிக்கப்படாத எரிபொருட்களை பயன்படுத்தும் பேருந்துகள் உள்ளிட்ட ஏனைய அனைத்து வாகனங்களுக்கு எதிராகவும் சட்ட ரீதியான செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக அனுமதியளிக்கப்படாத வேறு எரிபொருட்களை விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளின் தரம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன வெளியிட்ட கருத்து மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு என்பன தொடர்பில் பதிலளித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மற்றொரு சந்தேக நபர் கைது

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் 25 வயதுடைய ஹிங்குல பகுதியை சேர்ந்தவர் ஆவார். சந்தேக நபர் ஹம்பாந்தோட்டையில் சஹ்ரான் ஹாசிம் நடத்திய பயிற்சி முகாமில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், பயங்கரவாதிகளுக்கு உதவியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## 2.8 மில்லியன், 26 சிம் கார்டுகளுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது

டுபாயில் தலைமறைவாகியுள்ள போதைப் பொருள் கடத்தல்காரன் ஒருவனுக்கு உதவிய பெண் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதுடைய பெண் தெஹிவளை, நெதிமால பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் தலைமறைவாகியுள்ள போதைப் பொருள் கடத்தல்காரனான மிடிகம நந்துன் அல்லது ஹரக் கட்டா என்பவருக்கே இவ்வாறு உதவியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் 2020 ஆம் ஆண்டு 5 மாதங்களுக்குள் 720 கிலோ ஹெரோயின், 240 கிலோ ஐஸ் மற்றும் 20 நவீன 9 மி.மீ கைத்துப்பாக்கிகளை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 2.8 மில்லியன் ரூபா பணம் மற்றும் 26 சிம் கார்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புதையல் அகழ்வில் ஈடுபட்ட எண்மர் கைது

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் எட்டு சந்தேக நபர்களை நேற்று அதிகாலையில் கைது செய்துள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தோப்பூர், கந்தளாய் மற்றும் ஈச்சிலம்பற்று பகுதியைச் சேர்ந்த 45 முதல் 65 வயதுக்குட்பட்ட 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் வெருகல், மாவடிச்சேனை பகுதியில் வீடு ஒன்றில் புதையல் தோண்டிய போதே வெருகல் பகுதியிலுள்ள இராணுவ புலனாய்வு பகுதியினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து எட்டு சந்தேக நபர்களை கைது செய்து ஈச்சிலம்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களிடமிருந்து மண்வெட்டி 2, அலவாங்கு1, சவல்2, கேன் போத்தல்1, தாச்சு1, பிக்காசு1, பானை1 மற்றும் மோட்டார் சைக்கிள் 2 போன்றவற்றினையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# கர்நாடகாவில் ஒமைக்ரான் பாதிப்பு அச்சம் பொதுமக்களுக்கு அவசர முன்னெச்சரிக்கை

கர்நாடகாவில் ஒமைக்ரான் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட மருத்துவருடன் தொடர்பிலிருந்த 5 பேருக்கு, கொரோனாப் பாதிப்பிருப்பது, உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென் ஆப்ரிக்காவிலிருந்து கர்நாடகாவிற்குத் திரும்பிய இருவருக்கு, ஒமைக்ரான் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. 66 மற்றும் 46 வயதுடைய இரு ஆண்களுக்கு தொற்று உறுதியான இந்நிலையில், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களைக் கண்டறியும் பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஒமைக்ரான் தொற்றினால் பாதிக்கப்பட்ட 46 வயதான மருத்துவருடன் தொடர்பிலிருந்த ஐவருக்கே, கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மொத்தம் 6 பேர் தனிமைப்படுத்தப்பட்டு, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் யாருக்கும் எவ்விதத் தீவிர அறிகுறியும் தென்படவில்லை. அனைவரும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என்றும், கர்நாடக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.



மேலும், 5 பேரிடமும் நேரடியாகவும், மறைமுகமாகவும் 250ற்கும் மேற்பட்டோர் தொடர்பில் இருந்தமை தெரியவந்த நிலையில், அவர்கள் யாருக்கும் பாதிப்புக்கான அறிகுறிகள் இல்லையென, கர்நாடக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

ஒமைக்ரான் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதை அறிந்து, பொதுமக்கள் பீதியடைய வேண்டாமெனவும், மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்குமாறும், மாநில சுகாதாரத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.


## டெல்லியில் அதிகரிக்கும் காற்று மாசு; பள்ளி, கல்லூரிகளுக்கு மீண்டும் பூட்டு

தலைநகர் டெல்லி யில் தீபாவளிக் கொண்டாட்டங் களுக்குப் பின்னர் காற்று மாசின் அளவு அதிகரித்துக் காணப்படுவத னால், பொதுமக்கள் பெரிதும் அவதி யடைந்தனர்.

காற்று மாசு காரணமாக கடந்த மாதம் 13-ம் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்த, பள்ளி, கல்லூரிகள் கடந்த 29-ம் திகதி மீண்டும் செயற்படத் தொடங்கின. இந்நிலையில், காற்று மாசுஅதிகரித்தமையினால், டெல்லியில் அனைத்துப் பள்ளிகளும் மூடப்படுமென, டெல்லி அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக, டெல்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கோபால் ராய் தெரிவிக்கும் போது,

காற்றின் தரம் அதிகரிக்குமென்ற கணிப்பில், பள்ளிகளை மீண்டும் ஆரம்பித்தோம். ஆனால், இப்போது காற்றின் தரம் மிகவும் மோசமாகி விட்டது. எனவே, மறு உத்தரவு வரும் வரை, அனைத்துப் பள்ளிகளும் நேற்று முதல் மூடப்படுவதாகக் கூறியுள்ளார்.

## அந்தமான் அருகே மீண்டும் தாழமுக்கம் உருவாகும் வாய்ப்பு



வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், டிசம்பர் 2-வது வாரத்தில் அந்தமான் அருகே மீண்டும் புதிய தாழமுக்கம் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இவ்வருடத்தில் பருவமழை நன்றாகப் பெய்துவரும் நிலையில், வடகிழக்கு பருவமழை, தமிழகத்தில் நவம்பர் மாதம் கொட்டித் தீர்த்தது. இதனால், தமிழகம் முழுவதிலும், நீர் நிலைகள் நிரம்பி வழிந்து, பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து, டிசம்பர் மாதத்தில் இயல்பை விடக் கூடுதலாக மழைப் பொழிவு இருக்குமென, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

132 வீதத்திற்கும் மேல், மழை பெய்யக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அந்தமான் அருகே உருவான தாழமுக்கம் வலுப்பெற்று, புயலாக மாறி, இன்று கரையைக் கடக்கவுள்ளது.

தமிழகம் நோக்கி நகரும் புதிய தாழமுக்கமானது, மேலும் வலுவடைவதற்கு வாய்ப்புகள் இல்லையென்றும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மிதமான மழைக்கு மட்டுமே, வாய்ப்புகள் இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திற்குள் நுழைந்ததா ஒமிக்ரான்?

## திருச்சியில் வந்திறங்கிய பயணிக்கு கொரோனா தொற்று உறுதி




இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளை கொரோனா வைரஸ் அச்சுறுத்தி வரும் நிலையில்,சிங்கப்பூரிலிருந்து திருச்சி விமான நிலையத்தில் வந்திறங்கிய நபருக்கு கொரோனாப் பாதிப்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது உருமாறிய ஒமிக்ரான் எனும் புதிய வகை வைரஸ், பரவ ஆரம்பித்துள்ளது. இதனால், உலக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. சர்வதேச வழித்தடங்களை தற்காலிகமாக மூடுவதற்கு பல நாடுகள் முன்வந்திருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஒமிக்ரான் வைரஸைத் தடுக்கும் வகையில், வெளிநாட்டுப் பயணிகளுக்கு, பல்வேறு தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி சர்வதேச விமான நிலையத்திலும், புதிய விதிமுறைகள் அமுல் படுத்தப்பட்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளிலிருந்து, திருச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் ஒவ்வொருவருக்கும், பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னர், அவர்கள் வெளியேறிச் செல்ல முடியும். சிங்கப்பூரிலிருந்து திருச்சி விமான நிலையத்திற்கு, நேற்று முன்தினம் இரண்டு விமானங்களில், 282 பயணிகள் வருகை தந்தனர். ஒவ்வொருவருக்கும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, மூன்றரை மணி நேரத்தில், முடிவுகள் வழங்கப்பட்டு, பயணிகள் வெளியில் செல்வதற்கு, அனுமதிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில், சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் திருச்சிக்கு வந்துள்ள பயணிக்கு கொரோனாப் பாதிப்பு உறுதியாகியுள்ளது. தொற்று உறுதியான நிலையில், இந்த நபருக்கு ஒமிக்ரான் பாதிப்புள்ளதா எனப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

## வனப்பகுதி வழியாக செல்வதற்கு ஐயப்பன் பக்தர்களுக்கு அனுமதி

தற்போது சபரிமலை ஐயப்பன் கோவிலில், மண்டல பூஜை நடைபெற்று வரும் நிலையில், சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் பக்தர்கள் டிஜிட்டல் முறையில் காணிக்கை செலுத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்திலுள்ள சபரிமலை ஐயப்பன் கோவில் உலக பிரசித்தி பெற்றது.தற்போது சபரிமலை ஐயப்பன் கோவிலில், மண்டலபூஜை விழா நடைபெற்று வருகிறது. இதனால், பல்வேறு பகுதிகளிலிருந்தும் தினமும் அதிக அளவில் ஐயப்ப பக்தர்கள் வருகிறார்கள்.

சபரிமலை ஐயப்பன் கோவில் அமைந்துள்ள பகுதிகளில் சமீபத்தில் பெய்த தொடர் கன மழையினால், பம்பை ஆறு உட்பட பல்வேறு ஆறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. மேலும், எரிமேலி உள்ளிட்ட வனப்பகுதிகளில், மண்சரிவு ஏற்பட்டது.

இதனால், வனப்பகுதி வழியாக சபரிமலை செல்வதற்கு பக்தர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. தற்போது கன மழை குறைந்துள்ள நிலையில், மீண்டும் வனப்பகுதி வழியாக, சபரிமலைக்கு, பக்தர்களை அனுமதிப்பது குறித்து, ஆலய நிர்வாகிகள், ஆலோசனை நடத்தி வந்தனர். இதில், மீண்டும் பக்தர்களை எரிமேலி உள்ளிட்ட அடர்ந்த வனப்பகுதிகள் வழியாக, அனுமதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஐயப்ப பக்தர்களை மீண்டும் பாரம்பரியமான வனப்பகுதி வழியாக, சபரிமலைக்குச் செல்வதற்கு அனுமதிப்பது குறித்து, விரைவில் விரிவாக அறிவிக்கப்படுமென, ஆலய நிர்வாகம் கூறியுள்ளது.

## மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேராசிரியருக்குச் சிறை



நீண்ட நாட்களாக விருதுநகரில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேராசிரியர், கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.தமிழகம் முழுவதும் கடந்த சில வாரங்களாக, பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு கல்வி நிலையங்களில் ஏற்படும் பாலியல் தொல்லை குறித்த புகார்கள், பொதுமக்களை திடுக்கிட வைத்துள்ளன.

ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகில் அத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த, டென்சிங் பாலையா, சிவகாசி - ஸ்ரீ வில்லிப்புத்தூரிலுள்ள, தனியார் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். மேலும், இதே கல்லூரியில் தேசிய மாணவர் படை அமைப்பையும், நிர்வகித்து வருகிறார்.

இவர் தன்னிடம் படிக்கும் மாணவிக்கு, சில மாதங்களாக தொடர்ந்தும் பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதனை மாணவி பெற்றோரிடம் கூறிய நிலையில், அவர்கள் ஸ்ரீ வில்லிப்புத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், முறைப்பாடு செய்தனர்.

அதனடிப்படையில், பேராசிரியர் டென்சிங் பாலையா கைது செய்யப்பட்டார். பின்னர் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில், அவரை 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்குமாறு, நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தமிழக மக்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் விரைவில் அறிமுகமாகும் சைகோவ்-டி கொரோனா தடுப்பூசி




சைடஸ் கேடிலா நிறுவனத்தின், சைகோவ்-டி கொரோனா தடுப்பூசி, தமிழ்நாட்டில் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக, சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோவிஷீல்ட், கோவேக்சின் தடுப்பூசிகளை மத்திய அரசு செலுத்தி வரும் நிலையில், மூன்றாவதாக சைகோவ்-டி தடுப்பூசி, 7 மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

இம்மாத இறுதிக்குள் சைடஸ் கேடிலா நிறுவனம், மத்திய அரசிடம் தடுப்பூசியை வழங்கவுள்ள நிலையில், தமிழ்நாடு, பீஹார், மகாராஷ்டிரா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் செலுத்தப்படவுள்ளது.

28 நாட்கள் இடைவெளியில், 3 டோஸ்களாக செலுத்தப்படவுள்ள சைகோவ் டி தடுப்பூசியின் 11 லட்சத்து 60 ஆயிரம் டோஸ்கள், விரைவில் தமிழகத்திற்கு கொண்டு வரப்படவுள்ளதாக, சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## மூன்று மாதங்களுக்குப் பின் உயிருடன் வந்த அடக்கம் செய்யப்பட்ட நபர்

-தலைதெறித்து ஓடிய கிராம மக்கள்-



இந்தியாவில் இறந்தவிட்டதாக கூறி, அடக்கம் செய்யப்பட்ட தொழிலாளி, 3 மாதங்களின் பின்பு, உயிருடன் வந்த அதிர்ச்சி தரும் சம்பவம், இடம் பெற்றுள்ளது.

கர்நாடக மாநிலத்தின் சிக்கமாலூர் கிராமத்தைச் சேர்ந்த 59 வயதான நாராஜப்பா. இவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். மதுபோதைக்கு அடிமையான நாராஜப்பா, பெங்களூரிலுள்ள இளையமகள் வீட்டிற்குச் சென்றுள்ளார். அங்கும், மது அருந்திவிட்டு, வீட்டிற்குச் செல்லாமல், பல்வேறு இடங்களில் சுற்றித் திரிந்துள்ளார். இதையடுத்து தந்தையைக் காணவில்லையென, அவரது மகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்நிலையில், அங்குள்ள தனியார் மருத்துவமனைக்கருகில், நாராஜப்பா இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தது. இதனையடுத்து, அவரது உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்குப் பின்னர், சொந்த ஊரில் மகள்கள் இருவரும் அவரது உடலை அடக்கம் செய்துள்ளனர்.பின்னர், நாராஜப்பாவுக்கு இறப்பு சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திடீரென நாராஜப்பா, தனது சொந்த ஊரான சிக்கமாலூர் கிராமத்திற்கு வந்துள்ளார். இறந்துவிட்டதாக கூறி 3 மாதங்களுக்கு முன்னர்; அடக்கம் செய்யப்பட்டவர் திடீரென உயிருடன் வந்ததனால், கிராம மக்கள் அதிர்ச்சியடைந்து, தலைதெறிக்க ஓடினர்.

தகவலறிந்து வந்த வருவாய்த்துறை அதிகாரிகள், நடத்திய விசாரணையில், இறந்தது நாராஜப்பா இல்லை என்பதும், அவரது உருவ ஒற்றுமை கொண்ட வேறுநபர் என்பதும் தெரிய வந்தது. நாராஜப்பா கூலி வேலை செய்து கொண்டு, 3 மாதங்களாக ஒவ்வொரு ஊராகச் சுற்றிக் கொண்டிருந்ததும் தெரியவந்தது. இதனையடுத்து, இறந்ததாக கூறி அடக்கம் செய்யப்பட்ட நபர், யார் என்பது குறித்து, விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

## சீனப் பெண்ணை காதலித்து தமிழ் பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்த தமிழன்



தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், சீனாவைச் சேர்ந்த காதலியை, தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்துள்ளார்.

தமிழகத்தின் விழுப்புரத்தை சேர்ந்த கணேஷ் குமார் அமெரிக்காவில் பணிபுரிகிறார். இந்த நிலையில், சீனாவைச் சேர்ந்த ஜிம்பு எனும் பெண்ணுடன், கணேஷ் குமார் காதலில் விழுந்தார். இதையடுத்து, இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

கணேஷ் குமாரின் குடும்பத்தினரின் பங்குபெற்றுதலுடன், சென்னை பாலவாக்கத்தில் அவர்களின் திருமணம் தமிழ் பாரம்பரிய முறைப்படி சிறப்பாக நடைபெற்றது.

கொரோனா தொற்றினால், மணப்பெண் வீட்டினர், திருமணத்தில் பங்கேற்க முடியவில்லை.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பிரமுகர் கத்தியால் குத்திக் கொலை

- கேரளாவில் நடந்த பயங்கரம்-



கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி கூரிய ஆயதத்தினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கேரள மாநிலம், பத்தனம் திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த 34 வயதான சந்தீப் குமார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். இவர் பிரிங்கரா பகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளராக செயற்பட்டு வந்தார். இந்நிலையில், சேத்தன்ஹரி பகுதியில் நேற்று முன்தினம் இரவு சந்தீப் குமார் தனது உந்துருளியில் சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரைப் பின் தொடர்ந்து சென்ற சிலர், சந்தீப் குமாரின் பைக்கை திடீரென இடைமறித்தனர்.

மேலும், அந்த கும்பல் தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியைக் கொண்டு, சந்தீப் குமாரை 11 முறை கொடூரமாகக் குத்தினர். கத்திக்குத்து தாக்குதலின் போது சந்தீப்குமாரின் அலறல் சத்தம் கேட்ட, அக்கம் பக்கத்தினர், விரைந்து வந்தனர்.

ஆனால், உள்ளூர்வாசிகள் வருவதற்கு முன்னர் தாக்குதல் நடத்திய கும்பல், அங்கிருந்து தப்பியோடி விட்டது. இந்தக் கொடூரமான, கத்திக்குத்து தாக்குதலில் சந்தீப்குமார் சம்பவ இடத்திலேயே, ரத்த வெள்ளத்தில் சரிந்து பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார், சந்தீப்குமாரின் உடலைக் கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக, மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சந்தீப்குமாரை 5 இளைஞர்கள் கொண்ட கும்பல், கத்தியால் குத்திவிட்டு, தப்பிச் சென்றதாக, உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை குறித்து, வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், கனியம்பரம்பில் ஜிஷ்ஹனு மற்றும் ஸ்ரீ ஜித் ஆகிய 2 பேருக்கு, இந்தக் கொலையில் தொடர்பு இருக்கலாமென, சந்தேகித்துள்ளனர். அத்துடன் அவர்களைக் கைது செய்யும், நடவடிக்கையிலும், இறங்கியுள்ளனர். சந்தேகிக்கப்படும் நபர்கள் இருவரும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்களென, உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், தங்கள் கட்சி நிர்வாகி சந்தீப்குமாரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரே கொலை செய்துள்ளதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இந்த குற்றச்சாட்டிற்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

# மூன்று மடங்கு அதிக பாதிப்பினை ஏற்படுத்தும் ஓமிக்ரான் வைரஸ்

## - ஆய்வுகளில் வெளியான அதிர்ச்சித் தகவல்-

தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய புதிய வகை கொரோனாவான ஓமிக்ரான் வைரஸ், முன்பு உருமாறிய வைரஸ்களை விடவும், மிகவும் வீரியத்துடன் இருப்பது தெரியவந்துள்ளது.

2019இன் இறுதியில் தனது ஆட்டத்தை ஆரம்பித்த கொரோனா வைரஸின் பாதிப்புக் குறைய ஆரம்பித்த போது, கொரோனா வைரஸ் மரபணு மாற்றமடைந்து உருமாறியது. இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, இந்தியா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளில் உருமாறிய கொரோனா கண்டறியப்பட்டது.

இதற்கு ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா எனப் பெயரிடப்பட்டது. இதில் டெல்டா வகை உருமாறிய கொரோனா மற்றவைகளை விடவும், அதிக வீரியம் கொண்டதெனத், தெரிவிக்கப்பட்டது.

டெல்டா வகை வைரஸ் பல்வேறு நாடுகளுக்கும் பரவியது. இந்த நிலையில், தென் ஆப்பிரிக்காவில் கண்



டறியப்பட்டுள்ள உருமாறிய புதிய வகை கொரோனாவான ஓமிக்ரான் வைரஸ், முன்பு உருமாறிய வைரஸ்களைக் காட்டிலும், மிகவும் வீரியத்துடன் இருப்பது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஓமிக்ரான் வைரஸ் மிகவும் வேகமாக பரவும் தன்மை கொண்டதென, விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். மேலும், இந்த வைரஸ் தற்போது பயன்பாட்டிலுள்ள தடுப்பு மருந்துகளுக்கு கட்டுப்படுமா? என்பதில் சந்தேகம் நிலவி வருகின்றது.

ஓமிக்ரான் வைரஸ் சில நோய் எதிர்ப்புச் சக்திகளை, தகர்க்க கூடியதென்றும், விஞ்ஞானிகள் தெரிவித்திருப்பது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஓமிக்ரான் வைரஸைக் கட்டுப்படுத்துவது, மிகவும் கடினமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில், டெல்டா வைரஸை விடவும், 3 மடங்கு அதிக பாதிப்பை ஓமிக்ரான் வைரஸ் ஏற்படுத்துமென புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்ஆப்பிரிக்க சுகாதாரத்துறை ஓமிக்ரான் வைரஸ் தொடர்பாக சேகரித்த தரவுகளின் அடிப்படையில், இந்த தகவல் தெரிய வந்துள்ளது. தென் ஆப்பிரிக்க விஞ்ஞானிகளின் ஆரம்பக் கட்ட ஆய்வில், டெல்டா அல்லது பீட்டா வைரசுகளுடன் ஒப்பிடும் போது, ஓமிக்ரான் வைரஸ் மீண்டும் நோய்த் தொற்று ஏற்படுத்தும் வாய்ப்பு 3 மடங்கு அதிகமெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தென்ஆப்பிரிக்கா விஞ்ஞானி ஜூலியட் வில்லியம் கூறும் போது, தடுப்பூசியினால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்புச் சக்தியை, ஓமிக்ரான் எந்தளவிற்கு தவிர்க்கிறது என்பதை, இன்னும் மதிப்பிட முடியவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

# கனேடியர்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது குறித்து வெளியான அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவு

கனடாவில் புள்ளிவிவரத் துறை, கொரோனா காலகட்டமானது, கனடாவில் எவ்வாறு குழந்தை பிறக்கும் எண்ணிக்கையைப் பாதித்துள்ளது என்பதைக் காட்டும் ஒரு ஆய்வை மேற்கொண்டது.

அதன்படி, கடந்த வருடம் கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் மிகவும் குறைவாக இருந்தது. அத்துடன், 2006இற்குப் பின்னர், கடந்த ஆண்டில்தான் கனடாவில் மிகக்குறைந்த எண்ணிக்கையில் குழந்தைகள் பிறந்துள்ளார்கள்.

ஆனால் 2008இலிருந்தே கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் தொடர்ச்சியாக குறைந்து வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இப்படியே போனால், வரும் ஆண்டுகளில் கனடா மிகக் குறைவாக குழந்தைகள் பிறக்கும் நாடாக ஆகிவிடலாம்.

15 வயதிற்கும் 49 வயதிற்கும் இடையில் உள்ளவர்களில் கால்வாசிப்பேர் கொரோனா காரணமாக குழந்தை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை தள்ளிப்போட்டிருக்கிறார்கள். சுமார் 20 சதவிகிதம் பேர், தாங்கள் முன்பு விரும்பியதை விட, குறைவான குழந்தைகளையே பெற்றுக்கொள்ள இருப்பதாகவோ, அல்லது குழந்தை பெற்றுக்கொள்வதை தள்ளிப்போட இருப்பதாகவோ தெரிவித்துள்ளார்கள்.

வெறும் 4 சதவிகிதத்தினர் மட்டுமே, விரைவில் அல்லது அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்கள். கொரோனா காரணமாக, குழந்தைகள் வேண்டாமென இல்லாமல், குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடவேண்டுமென்ற எண்ணம்தான், மக்களிடம் பொதுவாகக் காணப்படுகின்றது. இந்த விடயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென, இந்த ஆய்வு கூறுகின்றது. காரணம், கனேடிய பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ளும் சராசரி வயது 31 ஆகும். ஆகவே, குழந்தை பெற்றுக் கொள்வதை தள்ளிப்போடுவதனால், உடல் ரீதியான காரணங்களால், சில பெண்களினால், திட்டமிட்டபடி அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகலாம்.

பெரும்பாலும், வெளிப்படையாக சிறுபான்மையினர் எனக் கருதப்படும் மக்களே, குறைவான குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, அல்லது குழந்தை பெற்றுக்கொள்வதை தள்ளிப்போடுவதற்கு, விரும்புகிறார்கள். அமெரிக்காவிலும், இதேபோல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வும், இதே கருத்தையே கூறுகின்றது.


ஆனால், அமெரிக்க ஆய்வு முடிவுகளைப் போல் அல்லாமல், கொரோனா பரவல் காரணமாக, வேலையின்மை, நிதிப்பிரச்சினைகள் முதலான பிரச்சினைகளினால், அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும். ஆனால், கனேடிய புலம்பெயர்தல் நிலை, குழந்தை பெறுதல் தொடர்பான திட்டங்கள் மீது, பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

### புதிய வாழ்வை ஆரம்பிக்க 8000 கி.மீ தூரம் கடல் கடந்து வந்த கடலாமை

மாலைதீவில் வலையில் சிக்கி காயமடைந்த பின்னர் ஸ்கொட்லாந்தில் புதிய வாழ்வை தொடங்கும் வாய்ப்பு ஒரு கடல் ஆமைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாலைதீவின் ரா அடோல் Raa Atoll ) பகுதியிலிருந்து காப்பாற்றப்பட்ட பின்னர், ஆமைகள் மறுவாழ்வு மையத்தில், ஆலிவ் ரிட்லி கடல் ஆமையான ஏப்ரல் பாதுகாக்கப்பட்டது. விலங்குகள் நல மருத்துவர்கள், அதற்கு நீண்டகாலப் பராமரிப்புத் தேவையென்றும், இந்த காட்டுப்பகுதியில் அது பிழைக்காதெனவும், கண்டறிந்தனர்.

இப்போது, பலோச்சில் உள்ள சீ லைஃப் லாச் லோமோண்ட் எனும் கடற்பகுதிக்கு இந்த ஆமையானது, 5,000 மைல்கள் (8,046 கிலோ மீற்றர் தூரம்) கொண்டு வரப்பட்டுள்ளது. சர்வதேச கடல் ஆமை பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக, கடல் ஆமையை இந்த மையம் எடுத்துக் கொண்டுள்ளது.



# ஓடு தளத்தில் பழுதாகி நின்ற விமானத்தை கைகளினால் தள்ளிய ஊழியர்கள்




வீதியில் பழுதாகி நிற்கும் கார், லொறி பஸ் போன்ற வாகனங்களை கைகளால் தள்ளியதை, நாம் அனைவரும் பார்த்திருப்போம். ஆனால், ஓடுதளத்தில் டயர் பஞ்சராகி நின்ற பயணிகள் விமானத்தை, கைகளினால், தள்ளிய சம்பவம் நேபாளத்தில், நிகழ்ந்திருக்கின்றது.

நேபாளம், கத்மண்ட் நகரை தலைமையிடமாகக் கொண்ட யீட்டி ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பயணிகள் விமானம், பஜூரா மாவட்டத்திலுள்ள, கோல்டி சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது.

அப்போது, விமானத்தின் பின்பக்க டயர் வெடித்தது. இதனால், விமானம் பஞ்சாராகி ஓடுதளத்தில் நடுவில் நின்று விட்டது. தொடர்ந்து விமானத்தை நகர்த்த முடியாதமையினால், அதே ஓடுதளத்தில் மற்றொரு விமானம் தரையிறங்க முயன்றது.

ஆனால், அந்த விமானம் தரையிறங்க முடியவில்லை. உடனே, விமானத்தில் பயணித்த பயணிகள், விமான நிலைய ஊழியர்களென, 20றக்கும் மேற்பட்டோர் விமானத்தை கைகளினால் தள்ளிச் சென்றனர்.

### பாலின மாற்று அறுவைச் சிகிச்சைக்கு தடை கோரும் மசோதா நிறைவேற்றம்

பாலின மாற்று அறுவைச் சிகிச்சைக்கு தடை கோரும் சட்ட மசோதா, கனடா நாடாளுமன்றத்தின் கீழ்சபையில்நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதா அடுத்தகட்டமாக மேல்சபையான செனட் சபையின் ஒப்புதலைப்பெற வேண்டும். இந்த சட்ட மசோதாவை ஆளும் லிபரல் கட்சி மட்டுமல்லாது, எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியினரும் ஆதரித்தமை, குறிப்பிடத்தக்கது.

இந்த மசோதா நிறைவேறியது குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சரும், இந்த விவகாரத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் ஆலோசகருமான ரேண்டி பாய்சனாலட் கருத்து வெளியிடும் போது, ''யாரும் சித்ரவதைக்கு சம்மதிக்க மாட்டார்கள்'' எனக் குறிப்பிட்டார்.

இந்த மசோதா, மேல் சபையிலும் நிறைவேறி சட்டமாகி விட்டால், கனடாவில் யாரும் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியாதென்பது, குறிப்பிடத்தக்கது.

### கொரோனாவிற்கு எதிராக அதிக செயற்திறனைக் காண்பிக்கும் மொடர்னா தடுப்பூசி




அது தொற்றுப் பாதிப்பைத் தடுப்பதில் 87 சதவீத செயற்திறனைக் கொண்டுள்ளதாகவும், நோயின் தீவிரத்திற்கு எதிராக 95 சதவீத பாதுகாப்பைக் கொண்டுள்ளதாகவும், ஆய்வில் தெரியவந்துள்ளது.


மொடர்னா தடுப்பூசியை செலுத்திய 3 லட்சத்து 52 ஆயிரத்து 878 பேருடன், தடுப்பூசி செலுத்தாத, அதே எண்ணிக்கையிலான நபர்களை ஒப்பிட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

அமெரிக்காவில் கொரோனாவிற்கு எதிரான மொடர்னா தடுப்பூசியின் 2-வது டோஸை செலுத்தி 5 மாதங்களான நிலையில்,

மரணத்திற்கு எதிராக 98 சதவீத செயற்திறனை, மொடர்னா தடுப்பூசி பெற்றிருக்கின்றது. மொடர்னா நிறுவனத்தின் நிதியளிப்பில், குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதன் முடிவுகள் லேன்செட் மருத்துவ இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

### ஆஸ்திரியாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து ஷாலென்பெர்க் இராஜினாமா



ஆஸ்திரியா நாட்டின் ஜனாதிபதி அலெக்சாண்டர் ஷாலென் பெர்க், பதவியேற்ற இரண்டு மாதங்களில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து, அதிபர் அலெக்சாண்டர் ஷாலென் பெர்க், வியாழக்கிழமை தனது பதவியைத் துறந்தார்.

இதுகுறித்து அவர் கூறும் போது, ஆஸ்திரியாவில் அதிக வாக்குகளைப் பெற்ற அரசாங்கத்தின் தலைவர் மற்றும் கட்சியின் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளும், விரைவில் ஒரு கைக்குள் இணைக்கப்பட வேண்டும் என்பதில், தான் உறுதியாக இருப்பதாகக் கூறினார்.

சந்தேகிக்கப்படும் லஞ்சம் மற்றும் நம்பிக்கை மீறல் தொடர்பான விசாரணையின் இலக்குகளில், குர்ஸ் உம் ஒருவரென, ஆஸ்திரிய வழக்கறிஞர்கள் அறிவித்தனர். குர்ஸின் அரசாங்கத்தில் இளைய கூட்டணிப் பங்காளிகளான பசுமைவாதிகள், அவரை மாற்ற வேண்டுமெனக் கூறிவந்தனர்.

இதனிடையே கன்சர்வேடிவ் ஆஸ்திரிய மக்கள் கட்சி, புதிய தலைவரை அறிவித்தவுடன், தான் பதவியிலிருந்து விலகுவதாக, முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஷால்லென்பெர்க் கூறினார்.

முன்னாள் அதிபர் செபாஸ்டியன் கர்ஸ் இராஜினாமாவைத் தொடர்ந்து, கடந்த ஒக்டோபர் மாதம் புதிய ஜனாதிபதியாக, அலெக்சாண்டர் ஷாலென்பெர்க் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரியா மக்கள் கட்சித் தலைவராக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி, செபாஸ்டியன் கர்ஸ், தனது குடும்பத்தினருடன், கூடுதல் நேரத்தைச் செலவிடும் வகையில், அரசியலை விட்டே விலகுவதாக அறிவித்தார்.

இதையடுத்து, நாட்டின் உள்துறை அமைச்சராக இருக்கும் கார்ல் நெஹாமர், ஆஸ்திரியா மக்கள் கட்சியின் தலைவராகவும், ஜனாதிபதிப் பொறுப்பையும் ஏற்பதற்கு வாய்ப்புள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# சிங்கப்பூரில் ஓமிக்ரான் தொற்றுடன் இருவர் கண்டுபிடிப்பு

சிங்கப்பூரில் கொரோனா வைரஸின் புதிய திரிபான, ஓமிக்ரான் தொற்றுப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்த விமானப் பயணிகளில் இருவருக்கு முதற்கட்டப் பரிசோதனையிலேயே ஓமிக்ரான் தொற்றுப் பாதிப்பு இருப்பது, உறுதி செய்யப்பட்டது. இத் தகவலை, சிங்கப்பூர் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இருவரும், கடந்த 1ஆம் திகதி ஜோஹனஸ்பெர்க் நகரிலிருந்து சிங்கப்பூருக்கு வந்தடைந்தனர். இதையடுத்து, அனைவரும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து சமூக அளவில் வைரஸ்தொற்று பரவவில்லையென்பது, உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நோயாளிகளும் தற்போது சிங்கப்பூரின் தொற்றுநோய்களுக்கான தேசிய நிலையத்தில், தனிமைப் படுத்தப் பட்ட நிலையில், இருவருக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், லேசான நோய் அறிகுறிகள் மட்டுமே, தென்படுவதாகவும், சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் 41 வயதான சிங்கப்பூரைச் சேர்ந்தவர் என்பதும், மற்றொருவர் 44 வயதான சிங்கப்பூர் நிரந்தரவாசி என்பதும் தெரியவந்துள்ளது.

ஓமிக்ரான் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், மரபணுப் பரிசோதனையின் மூலம், அதனை மறு உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இருவரது மாதிரிகளும், தேசிய பொதுச்சுகாதார ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இரு நோயாளிகளுடன் அவர்கள் வந்த விமானத்தில், 19 பேர் பயணம் செய்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் முதற்கட்ட பரிசோதனையில், தொற்றுப் பாதிப்பில்லை எனத் தெரிய வந்துள்ளது.

எனினும், பத்து நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர், 19 பேருக்கும் கொவிட் -19 பாதிப்புள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு, மீண்டும் பரிசோதனை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.